# 10

# டால்பின்®

உன்னால் முடியும்

## தமிழ்



புதிய பதிப்பு

100
100
உறுதி

**இணைப்பு**

- மெல்லக் கற்போருக்கான முழுமையான கையேடு
- PTA, அரசுத்தேர்வு வினா-விடைத்தொகுப்பு

DP®
டால்பின் பப்ளிகேசன்ஸ்®

# டால்பின்®

## 10

### உன்னால் முடியும்

# தமிழ்

**புதிய பதிப்பு**

**சிறப்பு அம்சங்கள்**

- பாட நூலின் வினா- விடைத்தொகுப்பு
- கூடுதல் வினா- விடைத்தொகுப்பு
- பெற்றோர் ஆசிரியர் கழக (PTA) வினா- விடைத்தொகுப்பு
- அரசுத் தேர்வு வினா - விடைத் தொகுப்பு
- மெல்லக் கற்போருக்கான முழுமையான கையேடு


நூலாசிரியர்
முனைவர். இரா.ஜான் சாமுவேல்
எம்.ஏ,பி.எட்,எம்.பில், பி.எச்.டி
பட்டதாரி தமிழாசிரியர்
கார்மல் மேல்நிலைப்பள்ளி, நாகர்கோவில்.

மெல்லக் கற்போருக்கான முழுமையான கையேடு
நூலாசிரியர்
முனைவர். மு.சந்திரவடிவு
எம்.ஏ,பி.எட்,எம்.பில், பி.எச்.டி
பட்டதாரி தமிழாசிரியர்
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அவிநாசி.



98653 06197 | 89256 77710 | 99435 67646
டால்பின் பப்ளிகேசன்ஸ்®
தரமே எங்களின் தாரக மந்திரம்
239, கீழப்பட்டித் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம். த.நா.
Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.com



© All Copyrights reserved


விலை : ரூ. 252

# பதிப்புரை

அன்புள்ள மாணவ மாணவிகளே!

தன்னம்பிக்கை

விடாமுயற்சி

கடின உழைப்பு

இம்மூன்றும் உங்களிடம் இருக்கும் வரை வெற்றியினை எவராலும் தடுக்க இயலாது.

விழிகளைத் திறக்கும் வரை
கண் இமைகூட உனக்குப் பாரமாகத்தான் தெரியும் – நீ
விழித்தெழுந்தால் அந்த சூரியனின் சுடர் கூட
உன்முன் சின்னப் பொறியாகவே தோன்றும்.

எனவே தன்னம்பிக்கையோடு எதையும் செய்யுங்கள். நீங்கள் எதைப் படித்தாலும் புரிந்து படியுங்கள். நீங்கள் அனைவரும் எளிதில் புரிந்து படிக்கும் வகையிலும் பொதுத் தேர்வு வினாத்தாள் வடிவமைப்பின் அடிப்படையிலும் உன்னால் முடியும் என்னும் இக்கையேடு வடிவமைக்கப்பட்டுள்ளது.

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் – நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம்.

என்னும் ஔவையாரின் பாடல் வரிகளுக்கேற்ப பயிற்சியும் முயற்சியும் இருந்தால் எதுவும் நமக்குச் சாத்தியமே என்பதை உணர்ந்து ஒவ்வொரு நாளும் படிப்பதைப் பிழையின்றி எழுதிப் பழகுங்கள். உங்களால் முடியாதது என்று எதுவும் இல்லை.

ஒவ்வொரு பாடத்திலும் 100/100 மதிப்பெண்கள் பெற்று மாநிலத்தின் முதல் இடத்தைப் பிடிக்க எமது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பதிப்பகத்தார்.

## புத்தகங்களைப் பெறுவதற்கு

**மரியாதைக்குரிய தலைமையாசிரியர்கள் / ஆசிரியைகள் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கு !**

வணக்கம். **டால்பின் பப்ளிகேஷன்ஸ்** நிறுவனத்திற்கு தாங்கள் வழங்கி வருகின்ற பேராதரவிற்கு எங்களின் சிரம்தாழ்ந்த நன்றிகள். நீங்களே எங்களின் வளர்ச்சியின் அடித்தளம். தற்பொழுது தாங்கள் தங்களுக்குத் தேவையான புத்தகங்களைப் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றிப் பெற்றுக்கொள்ளலாம்.

**புத்தகங்களைப் பெற**

அலைபேசி எண் (Mobile No) : **9865306197 / 8925677710 / 9943567646**

கட்செவி எண் (Whatsapp No) : **9345314146**

குறுஞ்செய்தி (Sms) : **9345330937**

வலைதளம் (Website) : **www.kalvidolphin.com**

மின்னஞ்சல் (E-mail ID) : **dolphin.pub2005@gmail.com**

## பணம் செலுத்துவதற்கான விவரங்கள்

**கேட்பு வரைவோலை (D.D.) அல்லது காசோலை (Cheque) :**

டால்பின் பப்ளிகேஷன்ஸ் - ஸ்ரீவில்லிபுத்தூர் **(DOLPHIN PUBLICATIONS, SRIVILLIPUTTUR)** என்ற பெயருக்கு எடுத்து அனுப்பவும்.

## வங்கி கணக்கு விவரங்கள்

Karur Vysya Bank
DOLPHIN PUBLICATIONS
SCAN & PAY WITH ANY UPI APP
wlpos.2753796a@kvb
TID: 2753796A

ICICI Bank iMobile
Merchant Name: DOLPHIN PUBLICATIONS
Mobile Number : 8668163362
Steps to Pay UPI QR Code
Open UPI app > Select Tap to Pay > Scan QR Code > Enter Amount


G Pay **63743 17883**

CITY UNION BANK
DOLPHIN PUBLICATIONS
MID: E01020101079104
SCAN & PAY
UPI ID:CFST20003166@CUB

| **KARUR VYSYA BANK** | | **CITY UNION BANK** | |
|---|---|---|---|
| A/C No | : 1804135000006000 | A/C No | : 328109000204092 |
| IFSC CODE | : KVBL0001804 | IFSC CODE | : CIUB0000328 |
| BRANCH | : Srivilliputtur | BRANCH | : Srivilliputtur |
| **ICICI BANK** | | **TAMILNADU MERCANTILE BANK** | |
| A/C No | : 446005500030 | A/C No | : 328150310875103 |
| IFSC CODE | : ICIC0004460 | IFSC CODE | : TMBL0000328 |
| BRANCH | : Srivilliputtur | BRANCH | : Srivilliputtur |

**பணம் செலுத்திய பின் கீழ்க்கண்ட தொலைபேசி எண்களில் கண்டிப்பாக தகவல் தெரிவிக்கவும்**

**98653 06197, 89256 77710, 99435 67646**


அதிகாரம்:
ஊழ்
திருக்குறள்
0373
திருவள்ளுவர் ஆண்டு தி.பி 2048
நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும்.
கூரிய அறிவு வழங்கக் கூடிய
நூல்களை ஒருவர் கற்றிருந்த போதிலும்
அவரது இயற்கை அறிவே
மேலோங்கி நிற்கும்.

# பொருளடக்கம்


| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|---|
| | பாடப்பகுதியும், ஆசிரியர்களும் | | | ix |
| | மனப்பாடப் பகுதிகள் | | | x |
| | அறிவை விரிவு செய் | | | xiii |
| 1. | மொழி, மனிதம் | | அமுத ஊற்று | 1 |
| | | செய்யுள் | அன்னைமொழியே! ✱ | 25 |
| | | உரைநடை | பாவாணர் பார்வையில் தமிழ்ச்சொல் வளம் | 29 |
| | | செய்யுள் | காலக்கணிதம் ✱ | 31 |
| | | துணைப்பாடம் | புயலிலே ஒரு தோணி | 34 |
| | | இலக்கணம் | சொல் | 35 |
| 2. | இயற்கை, சுற்றுச்சூழல், அறிவியல் | | உயிரின் ஓசை | 38 |
| | | உரைநடை | கேட்கிறதா என் குரல்! | 56 |
| | | செய்யுள் | பரிபாடல் | 59 |
| | | | மேகம் | 61 |
| | | துணைப்பாடம் | பிரும்மம் | 62 |
| | | இலக்கணம் | தொகாநிலைத் தொடர்கள் | 63 |

| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|---|
| 3. | பண்பாடு | கூட்டாஞ்சோறு | | 66 |
| | | வாழ்வியல் இலக்கியம் திருக்குறள் | | 85 |
| | | உரைநடை | விருந்து போற்றுதும்! | 90 |
| | | செய்யுள் | காசிக்காண்டம் ✸ | 93 |
| | | | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் | 95 |
| | | துணைப்பாடம் | கோபல்லபுரத்து மக்கள் | 97 |
| | | இலக்கணம் | தொகைநிலைத் தொடர்கள் | 98 |
| | | வாழ்வியல் | திருக்குறள் ✸ | 100 |
| 4. | கல்வி | மணற்கேணி | | 103 |
| | | உரைநடை | மொழிபெயர்ப்புக்கல்வி | 119 |
| | | செய்யுள் | திருவிளையாடற்புராணம் ✸ | 122 |
| | | துணைப்பாடம் | புதிய நம்பிக்கை | 127 |
| | | இலக்கணம் | இலக்கணம் - பொது | 127 |

| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|---|
| 5. | கலை,அழகியல், புதுமை | நிலா முற்றம் | | 131 |
| | | வாழ்வியல் இலக்கியம் திருக்குறள் | | 149 |
| | | உரைநடை | பன்முகக் கலைஞர் | 154 |
| | | செய்யுள் | கம்பராமாயணம் ✸ | 158 |
| | | துணைப்பாடம் | பாய்ச்சல் | 160 |
| | | இலக்கணம் | அகப்பொருள் இலக்கணம் | 162 |
| | | வாழ்வியல் | திருக்குறள் ✸ | 166 |
| 6. | நாகரிகம், நாடு, சமூகம் | விதை நெல் | | 168 |
| | | உரைநடை | சிற்றகல் ஒளி | 184 |
| | | செய்யுள் | சிலப்பதிகாரம் ✸ | 188 |
| | | | முத்தொள்ளாயிரம் ✸ | 191 |
| | | துணைப்பாடம் | மங்கையராய்ப் பிறப்பதற்கே..... | 193 |
| | | இலக்கணம் | புறப்பொருள் இலக்கணம் | 197 |
| 7. | அறம், தத்துவம், சிந்தனை | பெருவழி | | 200 |
| | | உரைநடை | சங்க இலக்கியத்தில் அறம் | 222 |
| | | செய்யுள் | தேம்பாவணி ✸ | 227 |
| | | | அக்கறை | 230 |
| | | இலக்கணம் | பா வகை, அலகிடுதல் | 231 |

| வ.எண். | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 1. | பாடலைப்படித்து வினாக்களுக்கு விடையளித்தல் | 234 |
| 2. | உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக. | 240 |
| 3. | விடைக்கேற்ற வினா அமைக்க | 246 |
| 4. | பகுபத உறுப்பிலக்கணம் | 248 |
| 5. | படிப்போம்; பயன்படுத்துவோம்! | 249 |
| 6. | பொருத்தமான நிறுத்தற்குறி இடுக | 249 |
| 7. | அணியிலக்கணம் | 250 |
| 8. | அலகிடுதல் | 252 |
| 9. | கடிதம் எழுதுதல் | 257 |
| 10. | படிவங்களை நிரப்புதல் | 266 |
| 11. | கட்டுரை | 268 |
| 12. | சொற்பொருள் எழுதுதல் | 283 |
| 13. | மெல்லக் கற்போர் கையேடு | 285 |
| 14. | வினாவங்கி | 319 |

# பாடப்பகுதியும், ஆசிரியர்களும்

## செய்யுள்

| பாடப்பகுதி | ஆசிரியர் |
|---|---|
| அன்னை மொழியே | பாவலரேறு பெருஞ்சித்திரனார் |
| காலக்கணிதம் | கண்ணதாசன் |
| பரிபாடல் | கீரந்தையார் |
| மேகம் | நாகூர்ரூமி |
| காசிக்காண்டம் | அதிவீரராம பாண்டியர் |
| முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் | குமரகுருபரர் |
| திருவிளையாடற்புராணம் | பரஞ்சோதி முனிவர் |
| கம்பராமாயணம் | கம்பர் |
| சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் |
| தேம்பாவணி | வீரமாமுனிவர் |
| அக்கறை | கல்யாண்ஜி |
| திருக்குறள் | திருவள்ளுவர் |

## உரைநடை

| பாடப்பகுதி | ஆசிரியர் |
|---|---|
| சிற்றகல் ஒளி | ம.பொ.சிவஞானம் |

## துணைப்பாடம்

| பாடப்பகுதி | ஆசிரியர் |
|---|---|
| புயலிலே ஒரு தோணி | ப.சிங்காரம் |
| பிரும்மம் | பிரபஞ்சன் |
| கோபல்லபுரத்து மக்கள் | கி.ராஜநாராயணன் |
| புதிய நம்பிக்கை | கமலாலயன் |
| பாய்ச்சல் | சா.கந்தசாமி |

# மனப்பாடப் பகுதிகள்

## அன்னை மொழியே!

**அழகார்ந்த செந்தமிழே!**

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

**(ப.ஆ.க.4,செப்.21,மே.22, ஜீன்.23, ஜீலை.24, மார்ச்.25)**

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

-பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

(**ப.ஆ.க.1, 6, மார்ச்.24**)

---

## காலக்கணிதம்

மாற்றம் எனது மானிடத் தத்துவம்;
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை! **(ஏப்ரல்.23)**
தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்! **(ப.ஆ.க-3)**
கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;
நானே தொடக்கம்; நானே முடிவு;
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!

- கண்ணதாசன்

---

## காசிக்காண்டம்

விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே. **(ப.ஆ.க.2, 5)**

- அதிவீரராம பாண்டியர்

---

## திருக்குறள்

### மெய் உணர்தல்

4. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. **(ஜீன்.23, ஜீலை.24)**

## பெரியாரைத் துணைக்கோடல்

8. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். **(பெ.ஆ.க.4, 5, செப்.2021, ஆகஸ்ட்.22)**

---

## கண்ணோட்டம்

11. பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண். **(அ.மா.தே.)**

---

## ஆள்வினை உடைமை

14. அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

16. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். **(மே-2022, மார்ச்.24)** - திருவள்ளுவர்

---

## திருவிளையாடற்புராணம்

புண்ணியப் புலவீர் யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப்
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா.

- பரஞ்சோதி முனிவர். **(பெ.ஆ.க-5,செப்-20)**

---

## கம்பராமாயணம்

தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம்வீற் றிருக்கும் மாதோ (35) **(செப்.2021)**

வெய்யோன்ஒளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோஎனும் இடையாளொடும் இளையானொடும் போனான்
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோஇவன் வடிவென்பதோர் அழியாஅழ குடையான் (1926) - கம்பர் **(மார்ச்.25)**

---

## திருக்குறள்

### அமைச்சு

4. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து செயல். **(பெ.ஆ.க-1, ஏப்ரல்.23)**

## பொருள் செயல் வகை

5. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள். **(மார்ச்.25)**

8. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

## குடிசெயல்வகை

14. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

## நல்குரவு

15. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது. **- திருவள்ளுவர்**

## சிலப்பதிகாரம்

தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்;
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்; **- இளங்கோவடிகள்**

**(பெ.ஆ.க-1,6, ஆகஸ்ட்.22, ஜீன்.23)**

## முத்தொள்ளாயிரம்

**சேரநாடு:**

அள்ளல் பழனத்(து) அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட(து) எனவெரீஇப் புள்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு.

## தேம்பாவணி

நவமணி வடக்க யில்போல்
நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
துணர்அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
ஒலித்து அழுவ போன்றே. - வீரமாமுனிவர்

**(பெ.ஆ.க-2, அ.மா.தே., செப்-20, மே-22, ஜீலை.24)**

# அறிவை விரிவு செய்

| | |
|---|---|
| நாம் ஏன் தமிழ் காக்க வேண்டும் | **முனைவர் சேதுமணி மணியன்** |
| தவறின்றித் தமிழ் எழுதுவோம் | **மா.நன்னன்** |
| பச்சை நிழல் | **உதயசங்கர்** |
| குயில்பாட்டு | **பாரதியார்** |
| அதோ அந்தப் பறவை போல | **ச. முகமது அலி** |
| உலகின் மிகச்சிறிய தவளை | **எஸ். ராமகிருஷ்ணன்** |
| திருக்குறள் தெளிவுரை | **வ.உ. சிதம்பரனார்** |
| சிறுவர் நாடோடிக் கதைகள் | **கி. ராஜநாராயணன்** |
| ஆறாம் திணை | **மருத்துவர் கு.சிவராமன்** |
| சிறந்த சிறுகதைகள் பதின்மூன்று | **தமிழில் வல்லிக்கண்ணன்** |
| குட்டி இளவரசன் | **தமிழில் வெ.ஸ்ரீராம்** |
| ஆசிரியரின் டைரி | **தமிழில் எம்.பி.அகிலா** |
| தக்கையின் மீது நான்கு கண்கள் | **சா. கந்தசாமி** |
| திருக்குறள் – கலைஞர் உரை | **கலைஞர் மு. கருணாநிதி** |
| என் கதை | **நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்** |
| வேருக்கு நீர் | **ராஜம் கிருஷ்ணன்** |
| நாற்காலிக்காரர் | **ந. முத்துசாமி** |
| அறமும் அரசியலும் | **மு. வரதராசனார்** |
| தமிழரின் தத்துவ மரபு | **அருணன்** |
| எண்ணங்கள் | **எம்.எஸ். உதயமூர்த்தி** |





எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே!

\- பாரதிதாசன்

இயல் ஒன்று

# அமுதஊற்று

மொழி, மனிதம்

## திறன் அறிவோம்(பக்கம்.15)

### பலவுள் தெரிக.

1. **காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர்...........** **(பெ.ஆ.க-6, ஜீலை.24)**
   அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது
   இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம் ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்
   **[அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது]**

2. **'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது-** **(அ.மா.தே, செப்.21, ஆகஸ்ட்.22, ஏப்ரல்.23, மார்ச்.25)**
   அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும் இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்
   **[ஈ) சருகும் சண்டும்]**

3. **எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்-** **(ஜீன்.23)**
   அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா
   **[இ) எம் + தமிழ் + நா]**

4. **'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே-** **(பெ.ஆ.க-3, மார்ச்-24)**
   அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல்; கேட்டவர்
   **[ஈ) பாடல்; கேட்டவர்]**

5. **வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிப்பது** **(பெ.ஆ.க-4, மே-22, ஜீலை.24)**
   அ) குலைப்பெயர் வகை ஆ) மணிப்பெயர் வகை இ) கிளைப்பெயர் வகை ஈ) இலைப்பெயர் வகை
   **[ ஆ) மணிப்பெயர் வகை]**

### பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் அரசுப் பொதுத் தேர்வு வினா - விடைகள்

1. **''சாகும் போதும் தமிழ்படித்துச் சாக வேண்டும் - என்றன் சாம்பலும் தமிழ் மணந்து வேகவேண்டும்'' - என்று முழங்கியவர்?** (ஆகஸ்ட்-2022)
   அ) பெருஞ்சித்திரனார் ஆ) க.சச்சிதானந்தன் இ) பாவாணர் ஈ) க.அப்பாத்துரையார்
   **[ஆ) க.சச்சிதானந்தன்]**

2. ‘செந்தமிழ்’ என்பது .......... (செப்.2021,மே.2022)

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

**[அ) பண்புத்தொகை]**

---

3. ‘வேறார் புகழுரையும்’ - இத்தொடரில் ‘வேறார்’ என்பது (செப்.2021,மே.2022)

அ) தமிழர் ஆ) சான்றோர் இ) வேற்று மொழியினர் ஈ) புலவர்

**[இ) வேற்று மொழியினர்]**

---

4. ‘உள்ளுயிரே’ என்று கவிஞர் யாரை அழைக்கிறார்? (செப்.2021,மே.2022)

அ) தம் தாயை ஆ) தமிழ் இ) தாய்நாட்டை ஈ) தம் குழந்தையை

**[ஆ) தமிழ்]**

---

5. ‘மொழி ஞாயிறு’ என்றழைக்கப்படுபவர் யார்? **(ஆகஸ்ட்.22)**

அ) தமிழழகனார் ஆ) கம்பர் இ) தேவநேயப் பாவாணர் ஈ) வைரமுத்து

**[இ) தேவநேயப் பாவாணர்]**

---

6. உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு **(மார்ச்.24)**

அ) இந்தியா ஆ) மலேசியா இ) சிங்கப்பூர் ஈ) சீனா **[ஆ) மலேசியா]**

---

7. மலர்விழி பாடினாள் - இத்தொடர் : **(மே-2022)**

அ) பொதுமொழி ஆ) தனிமொழி இ) தொடர்மொழி ஈ) அடுக்குத்தொடர்

**[இ) தொடர்மொழி]**

---

8. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க. **(செப்.20)**

(1) வினைமுற்று - (i) கெடு

(2) தொழிற்பெயர் - (ii) கட்டு

(3) முதனிலைத் தொழிற்பெயர் - (iii) எய்தல்

(4) வினையடி - (iv) வந்தான்

அ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i) ஆ) (1) - (iii), (2) - (i), (3) - (iv), (4) - (ii)

இ) (1) - (iv), (2) - (iii), (3) - (i), (4) - (ii) ஈ) (1) - (i), (2) - (iii), (3) - (ii), (4) - (iv)

**[இ) (1) - (iv), (2) - (iii), (3) - (i), (4) - (ii)]**

---

9. தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது **(பெ.ஆ.க-1)**

அ) தொழிற்பெயர் ஆ) முதனிலை திரிந்த தொழிற் பெயர்

இ) முதனிலைத் தொழிற்பெயர் ஈ) வினையாலணையும் பெயர்

**[ஈ) வினையாலணையும் பெயர்]**

---

10. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள் - இத்தொடர் **(அ.மா.தே)**

அ) வினாத்தொடர் ஆ) தனித்தொடர் இ) செய்தித்தொடர் ஈ) கலவைத்தொடர்

**[ஈ) கலவைத்தொடர்]**

---

11. **கொடுக்கப்பட்ட அனைத்துச் சொற்களும் அமைந்த பொருத்தமான தொடரைத் தேர்க.** **(பெ.ஆ.க-1)**

(மலை, மழை, மேகம், ஆறு, ஏரி, குளம்)

அ) மலைமீது மழை பெய்து ஆற்று வெள்ளம் ஊரின் வழியே பெருக்கெடுத்து ஓடியது.

ஆ) கருத்த மேகம் மலைமீது மழையைப் பொழிய ஆறு, குளம், அனைத்தும் நீரால் நிரம்பின.

இ) திரண்ட மேகங்கள் மலையில் மாரியாகி ஆறு, ஏரி, குளங்களில் நிறைந்தன.

ஈ)மலைமீது மழைபொழிய ஏரி குளங்கள் நிறைந்து பின் கடலில் சென்று கலந்தது.

**[இ) திரண்ட மேகங்கள் மலையில் மாரியாகி ஆறு, ஏரி, குளங்களில் நிறைந்தன.]**

---

12. **சோலையில் பூத்த மணமலர்களில் சுரும்புகள் மொய்த்துப் பண்பாடி மதுவுண்டன. இத்தொடரில் அடிக்கோடிட்ட சொற்களுக்குப் பொருத்தமான வேறு சொற்களை எழுதுக.** **(பெ.ஆ.க-1)**

அ) பூஞ்சோலை - அரும்புகள் ஆ) மலை - எறும்புகள் - தேன்

இ) மலர்வனத்தில்- வண்டுகள் - தேன் ஈ) கானகம் - வண்டுகள் - நீர்

**[இ) மலர்வனத்தில்- வண்டுகள் - தேன்]**

---

13. **இலையுதிர்காலம் .................... சருகாயின!**

**மழைக்காலம் .................... தழைத்தன!**

**சருகுகளோ செழுமையான உரங்களாயின!**

**- புதுக்கவிதைக்குப் பொருத்தமான எதுகை, மோனைச் சொற்களை இட்டு நிரப்புக.** **(பெ.ஆ.க-4)**

அ) மரங்களெல்லாம், கிளைபரப்பின

ஆ) காடெல்லாம், வளர்ந்தன

இ) இலைகளெல்லாம், மரங்களெல்லாம்

ஈ) மலையெல்லாம், முளைத்தன **[இ) இலைகளெல்லாம், மரங்களெல்லாம்]**

---

14. **''நாற்றிசையும் செல்லாத நாடில்லை''**

**''ஐந்துசால்பு ஊன்றிய தூண்''**

**- இந்தச் செய்யுள் அடிகளில் இடம்பெற்றுள்ள எண்ணுப்பெயர்களையும் அவற்றிற்கான தமிழ் எண்களையும் தேர்க.** **(ஏப்ரல்.23)**

அ) நான்கு, ஐந்து - ச, ரு ஆ) மூன்று, நான்கு - ங, ச

இ) ஐந்து, ஏழு - ரு, எ ஈ) நான்கு, ஆறு - ச, சா **[அ) நான்கு, ஐந்து - ச, ரு]**

---

15. **ஓர் ஆண்டின் மொத்த மாதங்களின் எண்ணிக்கையினைக் குறிக்கும் தமிழ் எண்ணைத் தேர்ந்தெடுக்க.** **(ஜீன்.23)**

அ) க ரு ஆ) க உ இ) க ங ஈ) க ச **[ஆ) க உ]**

---

## குறுவினா

1. **'பலகை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.**

**தனிமொழி:**

- 'பலகை' என்னும் சொல் தனிமொழியாக நின்று மரப்பலகையை உணர்த்தியது.

**தொடர்மொழி:**

- 'பலகை' என்னும் சொல் பல கை எனத் தொடர்ந்து நின்று பல கைகள் என்ற பொருளை உணர்த்துகிறது.

**பொதுமொழி:**

- 'பலகை' என்னும் சொல் தனிமொழியாகவும் தொடர் மொழியாகவும் நின்று பொருள் தருவதால் அது பொதுமொழி ஆயிற்று.

---

2. **'மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!**
**முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!- இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக. (அ.மா.தே)**

- சிலப்பதிகாரம்
- மணிமேகலை

- ஆகிய காப்பியங்களின் பெயர்கள் இப்பாடல் அடியில் இடம் பெற்றுள்ளன.

---

3. **ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.**
**ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.**
**ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.**
**மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக. (மார்ச்.24)**

**சரியான தொடர்கள்:**

- ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
- ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன. இவ்விரண்டு தொடர்களும் சரியான தொடர்களாகும்.

**பிழையான தொடர்:**

- ஒரு சீப்பில் பலதாறு வாழைப்பழங்கள் உள்ளன என்பது தவறான தொடராகும்.
- தாறு என்பது வாழைக்குலையைக் குறிக்கும் சொல் ஆகும். சீப்பு என்பது அதில் அடங்கிய வரிசையான பழங்கள் ஆகும். எனவே மேற்கண்ட தொடர் பிழையானது ஆகும்.

---

4. **''கொள்வோர் கொள்க: குரைப்போர் குரைக்க!**
**உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது''**
**பாடல் அடிகளில் உள்ள மோனை, எதுகைச் சொற்களைக் கண்டறிந்து எழுதுக.**

**சீர் மோனை:**

கொள்வோர் கொள்க

**சீர் எதுகை:**

கொள்வோர் கொள்க

**அடி எதுகை:**

கொள்வோர்
உள்வாய்

---

5. **சொல்வளத்தை உணர்த்த உதவும் நெல் வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

- தமிழ்நாட்டில் பலவகைத் தானியங்கள் விளைகின்றன. குறிப்பாக, இங்கு ஏராளமான நெல் வகைகள் விளைவிக்கப்படுகின்றன.
- செந்நெல், வெண்ணெல், கார்நெல், சம்பா, மட்டை எனப் பலவகைகள் விளைகின்றன. அவற்றுள் சம்பா வகையில் மட்டும் அறுபது வகைகள் உள்ளன.
- ஆவிரம்பூச்சம்பா, ஆனைக் கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச் சம்பா, சீரகச்சம்பா போன்ற வகைப் பெயர்கள் சொல்வளத்தை உணர்த்த உதவுகின்றன.

## பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் அரசுப் பொதுத் தேர்வு வினா - விடைகள்

1. **''மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!**
   **தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!''**
   **மண்ணுலகப் பேரரசு .......... தென்னன் மகள் .......... திருக்குறளின் மாண்புகழ் .......... மூன்று இடங்களுக்குமான ஒரே விடை என்ன? பாடலின் ஆசிரியர் யார்?** (அ.மா.வி.2019)
   - செந்தமிழ்
   - பாவலரேறு பெருஞ்சித்திரனார்

---

2. **தாவரங்களின் இளம் பயிர் வகைகளைக் குறிக்கும் சொற்களில் நான்கினை எழுதுக.** **(மே-2022)**
   - நாற்று, கன்று, குருத்து, பிள்ளை, குட்டி, மடலி (அ) வடலி, பைங்கூழ்

---

3. **தமிழ்நாட்டில் மட்டும் விளையும் சிறு கூலங்கள் யாவை?** **(ஏப்ரல்.23)**
   - வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி முதலிய சிறுகூலங்கள் தமிழ்நாட்டில் மட்டுமே விளைகின்றன.

---

4. **தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடு யாது?** **(அ.மா.தே.)**

| தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| வினை, பெயர்த்தன்மையாகி வினையையே உணர்த்தி நிற்கும். | தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிக்கும் |
| காலம் காட்டாது. | காலம் காட்டும். |
| படர்க்கைக்கே உரியது | மூவிடத்திற்கும் உரியது. |
| சான்று: நடத்தல் | சான்று : நடந்தவர் |

---

5. **'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.**
   **(பெ.ஆ.க-2, மார்ச்.24)**
   - வேங்கை - தனிமொழியின் பொருள் - வேங்கை என்னும் மரத்தைக் குறிக்கும் (அல்லது) புலியைக் குறிக்கும்.
   - வேம் + கை - தொடர்மொழியின் பொருள் - வேகின்ற கையைக் குறிக்கும்.
   - வேங்கை என்னும் சொல் தனிமொழியாகவும் தொடர் மொழியாகவும் நின்று பொருள் தருவதால் இது பொதுமொழி ஆயிற்று.

---

6. **ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி**
   **- இத்தொடர்கள் உணர்த்தும் மரங்களின் பெயர்களையும் தமிழெண்களையும் குறிப்பிடுக.** (செப்.2020)
   - ஆலும் - ஆலமரம், வேலும் - வேல மரம்
   - நாலும் - நாலடியார் - 4 - **ச**, இரண்டும் - திருக்குறள் - 2 - **உ**

---

## சிறுவினா

1. **தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை? (பெ.ஆ.க-2. மே-2022)**

**தமிழ்மொழியின் செழுமை:**

- அன்னை மொழியே! அழகு நிறைந்த செந்தமிழே!
- பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே!
- கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசே!
- பாண்டிய மன்னனின் மகளே!
- திருக்குறளின் பெரும் பெருமைக்குரியவளே!
- பத்துப்பாட்டே! எட்டுத்தொகையே!
- பதினெண் கீழ்க்கணக்கே!
- நிலைத்த சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே!

**தமிழின் பெருமை:**

- பழம்பெருமையும் தனக்கெனத் தனிச் சிறப்பும் இலக்கிய வளமும் கொண்ட செழுமை மிக்க தமிழே!
- உன் நீண்ட நிலைத்த தன்மையும் வேற்று மொழியார் புகழுரையும் எமக்குள் பற்றுணர்வை எழுப்புகின்றன.

**வாழ்த்துவதற்கான காரணம்:**

- எம் தனித்தமிழே! உன்னைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள, உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம்.

  - எனப் பாவலரேறு தமிழன்னையை வாழ்த்துகிறார்.

---

2. **‘புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது’. (பெ.ஆ.க-3, மே-2022, ஜீலை.24)**

**இதுபோல் இளம்பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.**

**நாற்று:**

- கத்தரி நாற்று வாங்கச் சந்தைக்குச் சென்றேன்.
- வயலில் நெல் நாற்று நட்டேன்.

**கன்று:**

- என் வீட்டுத்தோட்டத்தில் வாழைக்கன்று நட்டு வைத்தேன்.
- என் வீட்டுக் கொல்லையில் புளியங்கன்று நட்டேன்.
- திருமணத்தில் தாம்பூலத்தோடு மாங்கன்றும் அளித்தார்கள்.

**பிள்ளை:**

- அன்று தோட்டத்தில் தென்னம் பிள்ளையை நட்டேன்.

**வடலி:**

- ஆற்றங்கரைகளில் பனை வடலியை நட்டு வளர்த்தனர்.
- இன்று கற்பகத்தரு என்று அனைவராலும் புகழப்படும் பனை வடலியை அனைவரும் நட்டு வளர்க்க வேண்டும்.

---

3. **<u>'அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது'</u> இவை அனைத்தையும் யாம் அறிவோம். அது பற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும். இக்கூற்றில் அடிக்கோடிட்ட சொற்களில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.**

**(மார்ச்.24)**

| வினைமுற்று | தொழிற்பெயர் |
|---|---|
| அறிந்தது, அறியாதது | அறிதல், அறியாமை |
| புரிந்தது, புரியாதது | புரிதல், புரியாமை |
| தெரிந்தது, தெரியாதது | தெரிதல், தெரியாமை |
| பிறந்தது, பிறவாதது | பிறத்தல், பிறவாமை |

## பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் அரசுப் பொதுத் தேர்வு வினா - விடைகள்

1. **''உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது'' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக. (அ.மா.தே)**

**இடம்:**

கண்ணதாசன் கவிதைத் தொகுப்பில் காலக்கணிதம் என்னும் தலைப்பில் இடம்பெற்ற கவிதை வரியே ''உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது'' என்பதாகும்.

**பொருள்:**

''உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது'' என்னும் தொடர் ''பிறர் உள்ளத்திலிருந்து எழும் வார்த்தைகள் எனது உடம்பைப் பாதிக்காது'' என்னும் பொருளை உணர்த்துகிறது.

**விளக்கம்:**

மாறும் உலகின் நன்மை தீமைகளை அறிந்தே நான் எனது வாழ்க்கைப் பாதையை அமைக்கிறேன். என் கவிதைகள்தான் எனது வாக்கு மூலங்கள். இதைச் சிலர் ஏற்கின்றனர். சிலர் மறுக்கின்றனர். அது அவர்கள் உள்ளத்தில் தோன்றிய வார்த்தைகள். அவை, எந்த வகையிலும் எனது உடலைப் பாதிக்காது என்பதே இப்பாடல் வரி உணர்த்தும் கருத்தாகும்.

2. **'கவிஞன் யானோர் காலக் கணிதம்' - எனத்தொடங்கும் கவிஞர் கண்ணதாசனின் கவிதையில் உங்களைக் கவர்ந்த மூன்று தொடர்களை எழுதி காரணத்தைக் குறிப்பிடுக. (பெ.ஆ.க-4)**

காலக்கணிதம் கவிதையில் என்னை மிகவும் கவர்ந்த வரிகள்,

**'கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்'**
**'உண்டாயின் பிறர் உண்ணத் தருவேன்'**
**'கம்பன், பாரதி, தாசன் சொல்லாதனசொல்லிட முனைவேன்'**

-ஆகிய வரிகள் என்னைக் கவர்ந்தவையாகும்.

**கருப்படுபொருளை உருப்பட வைப்பேன்:**

என் எண்ணத்தில் தோன்றும் கருத்தை மற்றோர் புரியும்படி எடுத்துரைப்பேன் என்று கண்ணதாசன் கூறுகிறார். சிலர் தன் எண்ணத்தைத் தெளிவாக மற்றவர்களுக்குப் புரிய வைக்கும் ஆற்றல் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். தான் கற்றதை மற்றவர்களுக்குப்புரியும்படி எடுத்துச் சொல்லாதவன் எவ்வளவு கற்றிருந்தும் பயன் இல்லை என்று வள்ளுவர் கூறுகிறார். அந்த வகையில் கண்ணதாசன் அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் பாடல் எழுதுவதில் வல்லவராகத் திகழ்கிறார்.

**உண்டாயின் பிறர் உண்ணத் தருவேன்:**

என்னிடம் இருப்பதை மறைக்காமல் பிறருக்குக் கொடுப்பேன்.ஆனால் இந்த உலகில் இத்தகு எண்ணம் உடையவர்களைக் காண்பது அரிது. தன்னிடம் இருக்கும் பொருளை யாருக்கும் வழங்காது மறைத்து வைத்து வாழும் உலகில், இருப்பதைப் பகிர்ந்து வாழும் கண்ணதாசனின் செயல் பாராட்டுதற்கு உரியது.

**கம்பன், பாரதி, தாசன் சொல்லாதன சொல்லிட முனைவேன்:**

'கவிச்சக்கரவர்த்தி கம்பர், தேசியக்கவி பாரதியார், புரட்சிக்கவி பாரதிதாசன் ஆகியோர் கூறாத கருத்துகளைக் கூறிட முயற்சி செய்வேன்'. பிறர் கூறும் கருத்தையோ அதை ஒட்டிய கருத்தையோ கூறித் திரியும் கவிஞர் உலகில் அவர்கள் கூறாத கருத்துகளை மக்களுக்குக் கூறிட முயற்சி செய்வேன் என்னும் கண்ணதாசனின் கருத்து அனைத்துக் கவிஞர்களும் மனதில் கொண்டு செயல்பட வேண்டிய நல்ல கருத்தாகத் தோன்றுகிறது.

---

3. **'காலக்கணிதம்' கவிதையில் கவிஞர் கண்ணதாசன் குறிப்பிட்டுள்ள கருத்துகளுள் உங்களைக் கவர்ந்த ஐந்து கருத்துகளை எழுதுக. (மே-2022)**

- கவிஞனாகிய நான் ஒரு காலக்கணிதமாவேன். என் மனத்தில் கருக்கொள்ளும் பொருளை உருவம் கொடுத்து வெளியிடுவதில் வல்லவன் நான். அந்த வகையில் இவ்வுலகில் நான் ஒரு புகழ்மிக்க படைப்புக் கடவுளாவேன். என்னுடைய இந்தப் படைப்பாகிய செல்வம் பொன்னைக் காட்டிலும் விலைமதிப்புடைய பொருள் ஆகும்.
- சரி எனப்பட்டவற்றைப் பலர்க்கும் எடுத்துரைப்பது என் வேலை. அதுபோலத் தவறு எனத் தோன்றியவற்றை எதிர்ப்பதும் என் வேலை.
- படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய இம்மூன்று தொழில்களும் கடவுளும் நானுமே அறிந்த தொழில்கள் ஆகும் என்பதை அறிவீர்களாக.
- நான் செல்வர்கள் கையில் சிக்கிக்கொள்ளவும் மாட்டேன். ஆனால், எல்லோரிடமும் பாசமும் பற்றும் மிக்கவன்நான். எனக்கு விருப்பமான எல்லாவற்றையும் நான் மேற்கொள்வேன்.
- என்னிடம் பொருள் இருந்தால் மற்றவரும் உண்டு மகிழத் தருவேன். என்னிடம் பொருள் இல்லையாயின் எம்மைச் சார்ந்தவர்தம் இல்லக் கதவுகளைத் தட்டிக் கேட்பேன். வண்டாகப் பறந்து மலர்களிலெல்லாம் அமர்வேன். வாயில் உறிஞ்சிய தேனை ஊரில் உள்ளவர்க்கெல்லாம் தருவேன்.

---

## நெடுவினா

1. **நாட்டுவளமும் சொல்வளமும் தொடர்புடையது என்பதை பாவாணர் வழிநின்று விளக்குக.**

**நாடும் மொழியும்:**

'நாடும் மொழியும் நமதிரு கண்கள்' - என்கிறார் மகாகவி பாரதியார்.

**பாவாணர் கருத்து:**

ஒரு நாட்டின் வளமும் அங்கு வழங்கும் சொற்களின் வளமும் தொடர்புடையன என்கிறார் பாவாணர்.

**நாட்டு வளமும் சொல் வளமும்:**

நாட்டு வளம், சொல்வளத்தை உருவாக்குகிறது சொல்வளம் நாட்டுவளத்தை உணர்த்துகிறது.

**இலையும் தமிழும்:**

தமிழ்ப் பொதுமக்கள் இலையின் வன்மை, மென்மை ஆகிய தன்மைகளைக் கொண்டு தாள், ஓலை, தோகை, இலை எனப் பலவகைப் பெயர்களால் குறிப்பிடுகின்றனர்.

ஆனால் ஆங்கில மொழியில் இலையைக் குறிக்க Leaf என்னும் ஒரு சொல்லே பயன்படுத்தப்படுகிறது.

**விளைபொருளும் சொல்வளமும்:**

தமிழ்நாடு எத்துணைப் பொருள்வளம் உடையதென்று அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும்.

விளைபொருள்களின் மிகுதியால் தமிழ்ச்சொல்வளம் பெருகுகிறது.

**நெல்லின் வகைகள்:**

தமிழ்நாட்டில் ஏராளமான நெல்வகைகள் விளைவிக்கப்படுகின்றன. செந்நெல், வெண்ணெல், கார்நெல், சம்பா, மட்டை எனப் பல வகை நெல் வகைகள் விளைகின்றன. இவை தமிழ்ச்சொல் வளத்திற்குச் சான்றுகள்.

**சம்பா:**

தமிழகத்தில் விளையும் சம்பா நெல் வகையில் மட்டும் ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச் சம்பா, சீரகச் சம்பா என அறுபது உள் வகைகள் உள்ளன.

நெல்லின் உள் வகைகளின் பெயர்கள் தமிழின் சொல்வளத்தை உணர்த்துகின்றன.

**தமிழகத்தில் மட்டும் விளையும் தானியங்கள்:**

வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி முதலிய தானியங்கள் தமிழ்நாட்டைத் தவிர வேறெங்கும் விளைவதில்லை.

இவ்விளைச்சலால் தமிழில் அது சார்ந்த சொல்வளம் பெருகியிருக்கிறது.

**பல சொல் வகை:**

பயிர்வகை, வித்துவகை, வேர்வகை, பூவகை, காய் வகை, கனி வகை உள்ளிட்ட இருபதுக்கும் மேற்பட்ட தாவரங்கள் சார்ந்த பல்வேறு பகுதிகளைக் குறிக்கும் பெயர்கள் தமிழ்ச் சொல்வளத்தின் சிறப்பைப் புலப்படுத்துவதைப் பாவாணர் எடுத்துக் காட்டுகிறார்.

**தமிழ்ச் சொல்வளம்:**

சொல்வளம் நிறைந்த மொழியானது அது பயன்படுத்தப்படும் நாட்டின் வளத்தையும் நாகரிகத்தையும் உணர்த்துவதுடன் மக்களின் மதி நுட்பத்தையும் உணர்த்துகிறது. இதைப் பகுத்தும் தொகுத்தும் வகைப்படுத்தியுள்ள பாவாணரின் தமிழ்ச் சொல்வளம் பற்றிய கருத்துகளை உணர்ந்து மொழியைப் பயன்படுத்துவோம்.

## சுருக்கமான விடை

**முன்னுரை:**

நாட்டு வளத்திற்கும் சொல்வளத்திற்கும் உடைய தொடர்பு பற்றி பாவாணர் கூறுவதைக் காண்போம்.

**நாடும் மொழியும்:**

சொல் வளம் நிறைந்த மொழி

நாட்டின் வளத்தையும் நாகரிகத்தையும் உணர்த்தும்.

**நாட்டு வளமும் சொல் வளமும்:**

நாட்டுவளம் சொல்வளத்தை உருவாக்குகிறது.

சொல்வளம் நாட்டு வளத்தை உணர்த்துகிறது.

**விளை பொருளும் சொல் வளமும்:**

தமிழ்நாட்டு விளைபொருள் வகைகள்

தமிழ்ச் சொல்வளத்தைப் பெருக்குகிறது.

சம்பாவில் மட்டும் அறுபது வகைகள் உண்டு.

**பல சொல் வகை:**

பயிர்வகை, வித்துவகை, வேர்வகை, பூவகை, காய்வகை உள்ளிட்ட இருபதுக்கு மேற்பட்ட தாவரப் பெயர்கள் தமிழ்ச் சொல் வளத்தைப் பெருக்குகின்றன.

**இலையும் தமிழும்:**

தமிழில் இலை தாள், ஓலை, தோகை என்பன இலையைக் குறிக்கின்றன.

ஆங்கிலத்தில் Leaf என்ற ஒரே ஒரு சொல் மட்டுமே உண்டு.

**முடிவுரை:**

தமிழ்மொழி சொல்வளம் மிகுந்த மொழி.

நுட்பமான பெயர்களைக் கொண்ட மொழி.

தமிழ் மொழியின் பெருமையை உணர்வோம்.

தமிழ் மொழியை வளர்ப்போம்.

2. **காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.**

**''கவிஞன் யானோர் காலக் கணிதம்**
**கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!**
**புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்**
**பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!**
**இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்**
**இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை—**
**ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்**
**அவனும் யானுமே அறிந்தவை; அறிக!''**

**- கண்ணதாசன்.**

**I. முன்னுரை :**

சிறுகூடல் பட்டியில் பிறந்து, முத்தையா என்ற இயற்பெயரைக்கொண்டு, இன்று கவியரசு கண்ணதாசன் என்ற பெயரை மக்கள் மனதில் பதியச் செய்துவிட்டு மறைந்தாலும் நீங்காப் புகழ் கொண்டவர் கண்ணதாசன். தத்துவமானாலும், சரி காதல் கவிதைகளானாலும் சரி முத்து முத்தான வரிகளைக் கவிதைகளில் வார்த்தவர் இவர். இவர் இயற்றிய இப்பாடலில் பொதிந்துள்ள நயத்தைக்காண்போம்.

**II. திரண்ட கருத்து :**

**வாழைக்குக் குருத்து அழகு**
**கவிதைக்குக் கருத்து அழகு**

**பாடலின் கருத்து :**

- ☑ கவிஞனாகிய நான் காலத்தைக் கணிக்கக்கூடியவன் ஆவேன்.
- ☑ என் உள்ளத்தில் உதிக்கின்ற எண்ணத்தை எழுத்தில் வடித்துக்காட்டுபவன் நான்!
- ☑ பூமியில் நான் ஒரு புகழுடைய தெய்வமாவேன்!
- ☑ பொன்னைவிட விலைமிகுந்த செல்வமாகும் என்னுடைய கவிதை!
- ☑ உலகில் எவையெல்லாம் சரியோ அவற்றை மக்களுக்குத் தெரிவிப்பது என் கடமை ஆகும்!
- ☑ எது தவறோ அதை எதிர்ப்பதும் என் வேலையாகும்.
- ☑ ஆக்கல், அளித்தல், அழித்தல் இச்செயல்களை இறைவனுக்கு அடுத்துச் செய்பவன் கவிஞன் ஆவான் என்று இக்கவிதையில் கவிஞனைப் பாராட்டிப் பாடுகிறார்.

**III. மையக் கருத்து :**

காலத்தைக் கணிக்கக் கூடியவன் கவிஞன். ஆக்கலையும் அளித்தலையும் அழித்தலையும் இறைவனுக்கு அடுத்தபடி இப்புவியில் செய்பவர்கள் கவிஞர்கள் எனக் கவிஞர்களின் சிறப்பை உணர்த்துகிறது இப்பாடல்.

**IV. தொடை நயம் :**

**‘‘தொடையற்ற பாட்டு**
**நடையற்றுப் போகும்’’ என்பர்.**

அதற்கேற்ப இப்பாடலில் தொடைநயம் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

**மோனைத் தொடை :**

செய்யுளில் அடிதோறும் அல்லது சீர்தோறும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனைத் தொடையாகும்.

**சீர் மோனை:**

கவிஞன் யானோர் காலக்கணிதம்
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால்இயம்புவதென் தொழில்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக!

**அடி மோனை:**

கவிஞன்..... இவைசரி.....
கருப்பொருள்...... இவை தவறு.....

போன்ற மோனைச் சொற்கள் பயின்று வந்து நயம் மிக்கதாக உள்ளன.

**எதுகைத் தொடை :**

செய்யுளில் அடிதோறும் அல்லது சீர்தோறும் முதலெழுத்து அளவொத்து இருக்க இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது எதுகைத் தொடையாகும்.

**அடி எதுகை**

கவிஞன்...... இவைசரி.......
புவியில்...... இவைதவறு......

போன்ற எதுகைச் சொற்கள் பயின்று வந்து நயம் மிக்கதாக உள்ளன.

**முரண் தொடை :**

அடிதோறும் அல்லது சீர் தோறும் சொல்லோ, பொருளோ முரண்படத் தொடுப்பது முரண் தொடையாகும்.

**அடி முரண்:**

இவை சரி.....
இவை தவறு.....

**சீர் முரண்:**

**ஆக்கல்**அளித்தல்**அழித்தல்**இம் மூன்றும்

**V. அணி நயம் :**

**‘‘ஆண்மகனுக்குப் பணி அழகு**
**கவி மகளுக்கு அணி அழகு’’ என்பர்.**

**இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்**
**இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!**

இப்பாடல் வரிகளில் பொருள் பின்வருநிலை அணி பயின்று வந்துள்ளது.

இப்பாடலில் வரும் 'தொழில்', 'வேலை' என்னும் வேறு வேறு சொற்கள் 'தொழில்' என்னும் பொருளில் வருவதால் இது பொருள் பின்வருநிலையணி ஆகும்.

**VI.** சொல் நயம் :

**''விசயனுக்கு வில் அழகு**
**கவிதைக்குச் சொல் அழகு'' என்பர்.**

**''பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்''**இத்தொடரில் தமிழ்ச் சொற்களுக்கு விலையே இல்லை - என்னும் பொருளில் வந்துள்ள இச்சொற்றொடர் இக்கவிதைக்கு மிகுந்த சொல்நயத்தைத் தந்துள்ளது.

**VII.** பொருள் நயம் :

**''காருக்கு இருள் அழகு**
**கவிதைக்குப் பொருள் அழகு'' என்பர்.**

**'புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்.. ஆக்கல், அளித்தல், அழித்தல் இம்மூன்றும் அவனும் நானும் அறிந்தவை'** என்னும் வரிகள் முத்தொழில்களை இறைவன் மட்டுமல்ல. கவிஞனும் செய்கிறான் என்பதை உணர்த்துகிறது. இஃது பொருள்நயம் மிகுந்ததாக அமைந்துள்ளது.

**VIII.** தலைப்பு :

நான் ஒரு காலக்கணிதம்

**IX.** முடிவுரை :

**நாட்டிற்கு நல்லுரை வேண்டும்**
**செய்யுளுக்கு முடிவுரை வேண்டும்**

இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று கவிஞனால் ஆக்கல், அழித்தல், அளித்தலைச் செய்ய முடியும். ஆம்! கண்ணதாசன் உண்மையை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவதில் அவருக்கு நிகர் அவரே!

---

3. **புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?**

**முன்னுரை:**

இயற்கையின் அசைவுகள் அனைத்தும் அழகிய நாட்டியமாய் அமையும்போது இனிமையாகவும் மகிழ்வாகவும் இருக்கிறது.

இயற்கையின் அசைவு சீற்றமாய், ஊழித் தாண்டவமாக மாறி நம்மைச் சுருட்டிச் செல்ல எத்தனிக்கும்போது உயிரையே உறைய வைக்கிறது.

என்பதைப் புயலிலே ஒரு தோணி நமக்கு உணர்த்துகிறது.

**ஆசிரியர்:**

புயலிலே ஒரு தோணி என்ற கதையை எழுதியவர் ப.சிங்காரம். இந்த கதை ஆசிரியரின் நேரடி அனுபவங்களோடு கற்பனையும் கலந்துள்ளது.

**வருணனைகள்:**

- கொளுத்தும் வெயில் இமை நேரத்தில் மறைந்துவிட்டது.
- மேகப் பொதிகள் பரந்து திரண்டொன்றிக் கும்மிருட்டாய் இறுகி நின்றன.
- கிடுகிடுக்கும் இடி முழக்கத்துடன் மின்னல் கீற்றுகள் வானைப் பிளந்தது.
- இடி முழக்கச் சீனப் பிசாசுகள் தாவி வீசுகின்றன.

- வானம் உடைந்து கொட்டு கொட்டென்று வெள்ளம் கொட்டியது.
- சூறாவளியும் மாரியும் காற்றும் கூடிக்கலந்து ஆடிக் குதித்துக் கெக்கலித்தன.
- எலும்புகள் முறிவதுபோல் நொறுநொறு நொறுங்கல் ஒலி.
- தொங்கான் அப்படியும் இப்படியுமாய் தாவிக்குதித்து விழுந்துத் திணறி தத்தளிக்கிறது.
- அவுலியா மீன்கள் கூட்டம் கூட்டமாய், கண்மாயில் முதுகு தெரிய மூழ்கி நீந்தும் எருமைகளென முனகல் ஒலியோடு பின் தொடர்ந்தன.
- இந்த வருணனைத் தொடர்கள் புயல் தோன்றுவதற்கான அறிகுறிகளையும் புயலின் உக்கிரத்தாண்டவத்தையும் நம் மனக் கண் முன் நிறுத்துகின்றன.

**ஒலிக்குறிப்புச் சொற்கள்:**

கிடுகிடுக்கும் இடி முழக்கத்துடன்

மொழுமொழுவென நெளிந்தன

கூடிக்கலந்து கெக்கலித்தன

கிறுகிறுத்துக் கூத்தாடுகிறது.

நொறுநொறு நொறுங்கல் ஒலி

சிலு சிலு; மரமரப்பு;

நொய்ங் புய்ங் நொய்ங் புய்ங் நொய்ங் புய்ங்

இந்த ஒலிக்குறிப்புச் சொற்கள் புயலின் வேகத்தையும் புயலில் சிக்கிய கப்பலின் நொறுங்கல் ஒலியையும் நேரில் பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்துகின்றன.

**அடுக்குத் தொடர்கள்:**

இருட்டிருட்டு

ஓடி வாருங்கள்! ஓடி வாருங்கள்

தாவித் தாவிக் குதிகுதித்தது

சுழன்று சுழன்று கூத்தாடியது

விழுந்து விழுந்து நொறுங்குகிறது

சூரியன் சூரியன் சூரியன்.....

அவுலி மீன்கள் கூட்டம் கூட்டமாய்

கரை! கரை! கரை!

எங்கிருந்து வருகிறீர்கள்! எங்கிருந்து வருகிறீர்கள்!

பிலவான்....... பிலவான்

இந்த அடுக்குத்தொடர்கள் புயலில் சிக்கிய கப்பலின் நிலையும் மக்களின் அவலக் குரல் ஒலியையும் புயலுக்குப்பின் சூரிய உதயத்தையும் கரையையும் கண்ட மக்களின் நிம்மதிப் பெருமூச்சையும் வெளிப்படுத்துகின்றன.

**முடிவுரை:**

புயலிலே ஒரு தோணி கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் உயிரை உறையவைக்கும். புயலில் பயணித்த மக்களின் உயிர்ப் பயத்தையும் தோணிபடும் பாட்டையும் தத்ரூபமாக விளக்கின. நமக்கும் கப்பலில் பயணம் செய்த அனுபவத்தைக் கொடுத்தன.

## சுருக்கமான விடை

**முன்னுரை:**

ப.சிங்காரம் எழுதிய புயலிலே ஒரு தோணி உணர்த்தும் கடற்பயண அனுபவங்களைக் காண்போம்.

**கப்பல் பயணம்:**

துறை முகத்திலிருந்து கப்பல் தனது பயணத்தை அமைதியாகத் தொடங்கியது.

**புயலின் அறிகுறிகள்:**

கொழுத்தும் வெயில் மறைந்தது, புழுக்கம், மேகங்கள் - இருண்டன, மின்னல் மின்னியது, இடி இடித்தது.

**புயலும் மழையும்:**

வானம் உடைந்து கொட்டியது.

சூறாவளி காற்றும் மாரியும் கப்பலை நிலை குலையச் செய்தன.

கப்பல் நொறுங்கியது.

பயணிகள் தூக்கி வீசப்பட்டார்கள்.

கப்பலுக்குள் கடல் நீர் புகுந்தது.

**மாலுமிகள்:**

மாலுமிகள் ஓட்டையை அடைத்தார்கள்.

தண்ணீரை வெளியேற்றினார்கள்.

பெட்டிகளை வெளியே வீசினார்கள்.

**புயலுக்குப் பின் அமைதி:**

சூரியன் உதித்தது.

அலைகள் நெளிந்து ஓடின.

பிறைமதி தோன்றியது.

பறவைகள் தென்பட்டன.

மீன்கள் நீந்தின, கப்பல் பினாங்கு துறைமுகத்தில் நுழைந்தது. பயணிகள் மகிழ்ந்தனர்.

**முடிவுரை:**

புயலிலே ஒரு தோணி கதை புயலின் வெறியாட்டத்தை நமக்கு உணர்த்தியது.

## பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் அரசுப் பொதுத் தேர்வு வினா - விடைகள்

**4. 'புயலிலே ஒரு தோணி' கதைப்பகுதியில் இடம்பெறும் கடற்பயண நிகழ்வுகளை விவரித்து எழுதுக.**

**(ஏப்ரல்.23)**

**முன்னுரை:**

இயற்கையின் அசைவுகள் அனைத்தும் அழகிய நாட்டியமாய் அமையும் போது இனிமையாகவும் மகிழ்வாகவும் இருக்கிறது. இயற்கையின் அசைவுகள் சீற்றமாய் ஊழித் தாண்டவமாக மாறி நம்மைச் சுருட்டிச் செல்ல எத்தனிக்கும்போது உயிரையே உறைய வைக்கிறது என்பதைப் புயலிலே ஒரு தோணி நமக்கு உணர்த்துகிறது.

**ஆசிரியர்:**

புயலிலே ஒரு தோணி என்ற கதையை எழுதியவர் ப. சிங்காரம். இந்தக் கதை ஆசிரியரின் நேரடி அனுபவங்களோடு கற்பனையும் கலந்துள்ளது.

**புயலின் அறிகுறிகள்:**

கொளுத்திக் கொண்டிருந்த வெயில் இமை நேரத்தில் மறைந்து விட்டது. புழுங்கிற்று. மேகப் பொதிகள் பரந்து திரண்டு ஒன்றிக் கும்மிருட்டாய் இறுகி நின்றன. அலைகள் எண்ணெய் பூசியவை போல் மொழு மொழுவென நெளிந்தன. காற்றையே காணோம். ஒரே இறுக்கம்.

**புயலும் மழையும்:**

கிடுகிடுக்கும் இடி முழக்கத்துடன் மின்னல் சீட்டுகள் வானைப் பிளந்தன. வானம் உடைந்து கொட்டு கொட்டென்று வெள்ளம் கொட்டியது. சூறாவளியும் மாரியும் காற்றும் கூடிக் கலந்து ஆடிக் குதித்துக் கெக்கலித்தன. தொங்கான் அப்படியும் இப்படியுமாய் குதித்து விழுந்து திணறித் தத்தளிக்கிறது. எலும்புகள் முறிவது போல் நொறுநொறு நொறுங்கல் ஒலி தலைக்கு மேல் கடல் மழை புயல் வானம் மூன்றும் கூடிக் கலந்து கெக்கலித்தன.

**மாலுமிகள் செயல்:**

மாலுமிகள் கப்பலுக்குள் இருந்த நீரை வெளியேற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு சில மாலுமிகள் ஓட்டையை அடைக்கிறார்கள். சிலர் ஆப்பு அடிக்கிறார்கள், மரம் வெட்டுகிறார்கள், கப்பலின் உள் இருந்த தேயிலைப் பெட்டிகள் புகையிலைச் சிப்பங்களை வெளியே எடுத்து வீசி மக்களைக் காப்பாற்ற முயற்சிக்கிறார்கள்.

**இனிமேல் பயமில்லை:**

கடற்கூத்து எவ்வளவு நேரம் நீடித்தது என்று கணக்கிட முடியவில்லை. யாரும் கடிகாரத்தைப் பார்க்கவில்லை. புயல் மயக்கத்தில் இருந்து யாரும் இன்னும் முற்றாக தெளிந்து வரவில்லை. மாலுமி சீனமும் மலாயும் கலந்த மொழியில் சொன்னான் இனிமேல் பயம் இல்லை இரண்டு நாளில் கரையைப் பார்க்கலாம்.

**இனிய விடியல்:**

மறுநாள் காலையில் சூரியன் உதித்தது. கடல் அலைகள் ஒன்றன்பின் ஒன்றாகக் கப்பலை வந்து மோதின. பறவை மீன்கள் இருபுறமும் கூட்டம் கூட்டமாய் பறந்து விளையாடின. கப்பல் மிதந்து சென்றது. பிறைமதி வெளிச்சம் சிந்தியது. கருநீல வானில் விண்மீன்கள் வெகு ஒளியுடன் கண் சிமிட்டி நின்றன. உப்புக் காற்று உடலை வருடியது. மீன்கள் கூட்டம் கூட்டமாய் பின் தொடர்ந்தன. அலைகள் நெளிந்து ஓடின. கப்பலில் பயணித்தவர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

**கப்பல் கரையை நெருங்குதல்:**

கடற்கூத்துக்குப் பின் ஐந்தாம் நாள் மாலையில் மரப் பச்சை தெரிவது போல் இருந்தது. மீன்பிடிப் படகுகளின் விளக்குகள் தென்பட்டன. மணிக்கூண்டு தெரிந்தது. கட்டிட வரிசை தெருவில் திரியும் வண்டிகள் ஆட்கள் தெரிய தொடங்கினர். பினாங்கு துறைமுகத்தை அணுகினார்கள். அதிகாரிகள் எங்கிருந்து வருகிறீர்கள் என்று கேட்டார்கள். பிலவான் பிலவான் என்று மாலுமி கூறினார்.

**முடிவுரை:**

புயலிலே தோணி என்னும் கதை மூலம் புயலின் சீற்றத்தையும் அதன் வெறி ஆட்டத்தையும் கப்பலின் தத்தளிப்பையும் பயணிகளின் அச்சத்தையும் கடல் பயணத்தின் கொடூரங்களையும் உணர்ந்தோம் பயண அனுபவங்கள் நமக்குப் புதிய அனுபவத்தைத் தருகின்றன.

# மொழியை ஆள்வோம் (பக்கம்.17)

## மொழிபெயர்ப்பு

1. **If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart - Nelson Mandela** **(ப.ஆ.க-2,செப்.2021)**

ஒருவன் புரிந்து கொள்ளும் மொழியில் பேசினால், அது அவனுடைய அறிவுக்குள் செல்லும். அவனுக்கு உரிய தாய்மொழியில் பேசினால் அது அவனுடைய இதயத்திற்குள் செல்லும். - நெல்சன் மண்டேலா

2. **Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going ? - Rita Mae Brown** **(ப.ஆ.க-2,செப்.2021)**

மொழியானது பண்பாட்டுப் பாதையைக் காட்டும் வரைபடமாகும். மொழியானது மனிதன் எங்கிருந்து வந்தான், அவன் எங்கே செல்கிறான் என்பதையும் காட்டிவிடும். - ரீட்டா மே பிரௌன்

## பிழைகளைத் திருத்தி எழுதுக.

''தேணிலே ஊறிய செந்தமிழின் - சுவை
தேரும் சிலப்பதிகாறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம்
ஓதி யுனர்ந்தின் புருவோமே''

**(ப.ஆ.க-5, மே-2022, ஜீன்.23)**

**''தேனிலே ஊறிய செந்தமிழின் - சுவை**
**தேறும் சிலப்பதிகாரமதை**
**ஊனிலே எம்முயிர் உள்ளளவும் - நிதம்**
**ஓதி யுணர்ந்தின் புறுவோமே''**

## கீழ்க்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.

(குவியல், குலை, மந்தை, கட்டு)

| சொல் | கூட்டப்பெயர் | சொல் | கூட்டப்பெயர் |
|---|---|---|---|
| கல் **(ப.ஆ.க-4, அ.மா.தே)** | குவியல் | ஆடு **(ப.ஆ.க-4)** | மந்தை |
| பழம் **(அ.மா.தே, ஜீன்.23)** | குலை | கீரை **(ப.ஆ.க-4)** | கட்டு |
| புல் **(ஜீன்.23)** | கட்டு | மக்கள் **(ப.ஆ.க-4)** | கூட்டம் |

## வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.

1. **கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.**
   கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கின்றவரை அழைத்து வாருங்கள்.
2. **ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.** **(மார்ச்.25)**
   ஊட்டமிகு உணவு உண்டவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
3. **நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.**
   நேற்று என்னைச் சந்தித்தவர் என் நண்பர்.
4. **பொது அறிவு நூல்களைத் தேடிப்படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.** **(மார்ச்.25)**
   பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தவர் போட்டித்தேர்வில் வென்றார்.

## தொடர்களில் உள்ள தடித்த சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை மீள எழுதுக.

1. **உலகில்** வாழும் **மக்களில்** சிலர் **கனி**யிருக்கக் காய் **புசி**த்தலைப்போல, இன்சொல் இருக்க வன்சொல் பேசி **இன்னற்**படுகின்றனர்.
   **புவியில்** வாழும் **மனிதர்களில்** சிலர் **பழம்** இருக்கக் காய் **உண்ணு**தலைப்போல, இன்சொல் இருக்க வன்சொல் பேசித் **துன்பப்**படுகின்றனர்.

2. வள்ளல் குமணன் **வறுமையால்** வாடிவந்த **புலவனுக்குத்** தனது தலையைக் **கொடுத்து** மங்காப் **புகழ்** பெற்றான்.
   வள்ளல் குமணன் **ஏழ்மையால்** வாடிவந்த **கவிஞனுக்குத்** தனது தலையைத் **தந்து** மங்காப் **பெருமை** பெற்றான்.

3. நளனும் அவனது **துணைவியும்** நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் மழை**முகில்** கண்ட **மஞ்ஞை** போலக் **களி** கொண்டனர்.
   நளனும் அவனது **மனைவியும்** நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் மழை**மேகம்** கண்ட **மயில்** போல **மகிழ்ச்சி** கொண்டனர்.

4. **சோலையிற்** பூத்த மணமலர்களில் **சுரும்புகள்** மொய்த்துப் பண்பாடி **மது**வுண்டன.
   **பூங்காவிற்** பூத்த மணமலர்களில் **வண்டுகள்** மொய்த்துப் பண்பாடித் **தேன்** உண்டன.

5. பசுப்போல் **சாந்தமும் புலி**போல் **தீரமும் யானை** போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.
   **ஆ**போல் **அமைதியும் வேங்கை** போல் **வலிமையும் வேழம்** போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

பொருள்

| | |
|---|---|
| 1. உலகம் | புவி, அண்டம் |
| 2. மக்கள் | மனிதர் |
| 3. கனி | பழம் |
| 4. புசி | உண் |
| 5. இன்னல் | துன்பம் |
| 6. வறுமையால் | ஏழ்மையால் |
| 7. புலவன் | கவிஞன் |
| 8. கொடுத்து | தந்து |
| 9. புகழ் | பெருமை |
| 10. துணைவி | மனைவி |

| | |
|---|---|
| 11. முகில் | மேகம் |
| 12. மஞ்ஞை | மயில் |
| 13. களி | மகிழ்ச்சி |
| 14. சோலை | பூங்கா |
| 15. சுரும்புகள் | வண்டுகள் |
| 16. மது | தேன் |
| 17. பசு | ஆ |
| 18. சாந்தம் | பொறுமை, அமைதி |
| 19. புலி | வேங்கை |
| 20. யானை | வேழம் |

## கட்டுரை எழுதுக.

**குமரிக்கடல் முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்.** **(பெ.ஆ.க-1,அ.மா.தே)**

**இக்கருத்தைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

**குறிப்புகளைக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

**குறிப்புகள் :** முன்னுரை - தமிழன்னையின் அணிகலன்கள் - தமிழ்ச் சான்றோர் - தமிழின் வளர்ச்சி - தமிழின் எதிர்காலம் - முடிவுரை **(ஜீன்.23)**

# சான்றோர் வளர்த்த தமிழ்

**முன்னுரை:**

''கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து
முன்தோன்றிய மூத்த மொழி''
''முதல் மாந்தன் பேசிய மொழி''
- நம் தாய்மொழியாம் தமிழ்மொழி.

அத்தகு சீர்மைமிகு தமிழ்மொழியை வளர்த்து வளர்ந்த சான்றோர்களைப் பற்றிக் காண்போம்.

**தமிழின் எல்லை:**

தொல்காப்பியர் காலத்தில் வடவேங்கடம் முதல் தென்குமரிவரை எல்லையாகக் கொண்ட தமிழ்மொழி இன்று உலகின் பெரும்பாலான நாடுகளில் பேசப்படும் மொழியாக வளர்ந்திருக்கிறது. ஒவ்வொரு நாடுகளிலும் ஐந்து தமிழர் முதல் ஐந்து இலட்சம் தமிழர்வரை வாழ்ந்து தமிழை வளர்க்கின்றனர்.

**சங்கம் கண்ட தமிழ்:**

பாண்டியர்கள் சங்கம் வைத்துத் தமிழை வளர்த்தனர். சங்கப் பலகையில் அமர்ந்து சங்க இலக்கியம் படைத்துத் தந்த புலவர்கள் அனைவரும் தமிழ் வளர்த்த சான்றோர் பெருமக்களே. சங்கப் புலவர்களின் பாடல்களைத் தொகுத்தவர்களும், தொகுப்பித்தவர்களும் தமிழ் வளர்த்த சான்றோரே.

**நான்காம் தமிழ்ச்சங்கம்:**

முதல், இடை, கடைச் சங்கங்கள் கடற்கோளால் அழிந்த பின்னர் பரிதிமாற் கலைஞர், உ.வே.சா. , இராகவனார், பாசுகர சேதுபதி, பாண்டித்துரைத்தேவர் ஆகியோர் நான்காம் தமிழ்ச் சங்கத்தை அமைத்துத் தமிழை வளர்த்தனர்.

**வள்ளுவரும் ஔவையும்:**

ஓரடியில் ஆத்திச்சூடி தந்த ஔவையும் ஈரடியில் உலகப் பொதுமறையைத் தந்த வள்ளுவரும் தமிழ் மொழியை வளர்த்தவர்களே.

**சிற்றிலக்கியங்கள் தந்த சான்றோர்:**

பரணி பாடிய செயங்கொண்டாரும், உலா பாடிய ஒட்டக்கூத்தரும், குறவஞ்சி பாடிய திரிகூடராசப்ப கவிராயரும், தூது பிள்ளைத்தமிழ், பள்ளு போன்ற 96 வகை சிற்றிலக்கியங்களையும் தமிழுக்கு வழங்கி, தமிழ்மொழியை வளரச் செய்த புலவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் வளர்த்த சான்றோரே.

**தமிழை ஆதரித்த வள்ளல்கள்:**

தான் வீழ்ந்தாலும் கவலை இல்லை. தமிழ் வாழட்டும் என நெல்லிக்கனியை ஔவைக்குத் தந்த அதியனும் ஏழைப்புலவனுக்காகத் தன் தலையைக் கொடுத்த குமணனும் தமிழ் வளர்த்த வள்ளல்களும் மன்னர்களும் தமிழ் வளர்த்த சான்றோரே.

**தமிழ் வளர்த்த பிறநாட்டார்:**

தமிழின் சிறப்புகளை மொழிபெயர்ப்பின் மூலம் உலகறியச் செய்த ஜி.யு.போப்பும் சதுரகராதியைத் தந்த வீரமாமுனிவரும் தமிழ் வளர்த்த சான்றோரே.

**மொழிப் பற்றாளர்:**

நம் பழம்பெரும் இலக்கியங்களையெல்லாம் திருத்தமாகப் பதிப்பித்துத் தமிழர் கைகளில் தவழச் செய்தஉ.வே.சா, தமது பேச்சாலும் எழுத்தாலும் தனித்தமிழ் உணர்வை வளர்த்த மறைமலை அடிகளார், குழந்தை இலக்கியம் வளர்த்த கவிமணி, தமிழ் நடையை வளர்த்த தமிழ்த்தென்றல் திரு.வி.க., நமக்குத் தொழில் கவிதை என்ற பாரதி, புதுவை தந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை, உரைநடை இலக்கியம் வளர்த்த மு.வ., தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்த பரிதிமாற்கலைஞர் ஆகியோரும் இந்தித் திணிப்புப் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டவர்களும் இனிமேலும் தமிழ் வளர்க்கும் சான்றோர்களும், தமிழ் வளர்த்த சான்றோர்களே.

முடிவுரை:

குமரிக் கண்டத்தில் தோன்றி உலகமெலாம் பரவித் தன் புகழை நிலைநாட்டி வளர்ந்துவரும் தமிழ்மொழியைப் பேசிவரும் ஒவ்வொருவரும் தமிழ் வளர்த்த சான்றோரே. எனவே, அனைவரும் தூய தமிழில் பேசுவோம்; தமிழ்மொழியை வளர்ப்போம்.

---

## கொடுக்கப்பட்டுள்ள பாடலைப் படித்து நயம் பாராட்டுக.

**கவிதையில் உள்ள திரண்ட கருத்து, பொருள் நயம், சொல் நயம், சந்த நயம், தொடை நயம், அணி நயம் ஆகியவை இடம்பெற வேண்டும்.**

**தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே**
**தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே**
**ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே**
**உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே**
**வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே**
**மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே**
**தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே**
**தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே**

**- கா.நமச்சிவாயர்**

**முன்னுரை:**

தமிழகத்தின் சிறந்த புலவராக, தமிழறிஞராக விளங்கிய தமிழ்ப்பேராசிரியர் கா.நமச்சிவாயர் தமிழுக்குத் தொண்டாற்றிய பெருமக்களுள் ஒருவர். அவர் எழுதிய இனிய கவிதையின் நயத்தினைப் பின்வருமாறு காண்போம்.

**பாடலின் திரண்ட கருத்து:**

**வாழைக்குக் குருத்து அழகு**
**கவிதைக்குக் கருத்து அழகு**

- ☑ தேனைவிட மிக இனிமையான நல்ல செந்தமிழ் மொழியே!
- ☑ தென்னாடு நன்கு விளக்கமுறத்திகழ்ந்த தென்மொழியே!
- ☑ எங்கள் உடம்பிலும் ஒளிரும் ஒண்மைத் தமிழே!
- ☑ வானைவிட ஓங்கி உயர்ந்த வளமை கொண்ட தமிழே!
- ☑ மனிதர்க்கு இரு கண்ணாக விளங்கும் நலமிக்க மொழியே!
- ☑ தனக்கெனத் தனிச் சிறப்பிடம் பெற்ற தனித்தமிழ் மொழியே!
- ☑ தழைத்து இனிது ஓங்குவாய்த் தண்டமிழே! எனத் தமிழைப் போற்றிப் பாடியுள்ளார்.

**மையக் கருத்து:**

தென்னாட்டில் திகழ்ந்த, தேனைவிட உயர்ந்த, ஊனில் கலந்த, வானைவிட உயர்ந்த, மனிதர்க்கு இரு கண்ணாய் விளங்கும், தன்னிகரில்லாத் தமிழ் இனிது ஓங்குக என்று மகிழ்ந்து பாடுகிறார்.

**தொடை நயம்:**

**''தொடையற்ற பாட்டு**
**நடையற்றுப் போகும்'' என்பர்**

**மோனைத் தொடை:**

செய்யுளில் அடிதோறும் அல்லது சீர்தோறும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனைத் தொடையாகும்.

வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே
தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே

போன்ற மோனைச் சொற்கள் பயின்று வந்து நயம் மிக்கதாக உள்ளன.

**எதுகைத் தொடை:**

செய்யுளில் ஒவ்வோர் அடியிலும் அல்லது சீரிலும் முதலெழுத்து அளவொத்து இருக்க இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.

தே**னி**னும்
ஊ**னி**னும்

போன்ற எதுகைச் சொற்கள் பயின்று வந்து நயம் மிக்கதாக விளங்குகின்றன.

**இயைபுத் தொடை:**

செய்யுளில் ஒவ்வொரு அடியிலும் இறுதி எழுத்தோ அசையோ சீரோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடையாகும்.

தேனினும்..... **மொழியே!**
ஊனினும்..... **மொழியே!**
வானினும்..... **மொழியே!**
தானனி..... **மொழியே!**

போன்ற இயைபுச் சொற்கள் பயின்று வந்து நயம் மிக்கதாக உள்ளன.

**அணி நயம்:**

**''ஆண்மகனுக்குப் பணி அழகு**
**கவி மகளுக்கு அணி அழகு'' என்பதற்கேற்ப**

இப்பாடலில் **'உயர்வு நவிற்சியணி'** பயின்று வந்துள்ளது.

**வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே!**

என்னும் பாடல் வரியில் உயர்வு நவிற்சியணி பயின்று வந்துள்ளது.

**சொல் நயம்:**

**''விசயனுக்கு வில் அழகு**
**கவிதைக்குச் சொல் அழகு'' என்பர்**

''வானினும் ஓங்கிய வண்டமிழ்'' இத்தொடரில் வளமை என்னும் பொருளில் வந்துள்ள இச்சொல், சொல்நயம் மிக்கதாக உள்ளது.

**பொருள் நயம்:**

**''காருக்கு இருள் அழகு**
**கவிதைக்குப் பொருள் அழகு'' என்பர்**

**ஊனினும் ஒளிர்வுறும்** இத்தொடரில் அருமையான, ஆழமான கருத்து பொதிந்துள்ளது. உடம்பாக, உடம்பில் ஒளிரும் தன்மையாக எனும் பொருள் வரும் இவ்வரி அருமையிலும் அருமை.

**சந்த நயம்:**

**''யானைக்குத் தந்தம் அழகு**
**கவிதைக்குச் சந்தம் அழகு'' என்பர்**

**''செந்தமிழ் மொழியே! ஒண்டமிழ் மொழியே! வண்டமிழ் மொழியே! தண்டமிழ் மொழியே!** என்னும் தொடர்கள் படிப்பதற்கு ஓசை நயமிக்கதாக உள்ளது.

இப்பாடல் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியப்பா வகையில் இயற்றப்பட்டுள்ளதால், ஆசிரியப்பாவிற்குரிய **அகவல் ஓசை** பயின்று வந்து சந்த நயமிக்கதாக உள்ளது.

**சுவை நயம்:**

**''உணவிற்கு அறுசுவை**
**கவிதைக்கு அருமை சுவை'' என்பர்**

தமிழைப் பெருமைப்படுத்திப் பாடியுள்ளமையால் இப்பாடலில் **''பெருமிதச்சுவை''** பயின்று வந்துள்ளது.

**தலைப்பு:**

தனித்தமிழே! தாயே!

**முடிவுரை:**

**நாட்டிற்கு நல்லுரை வேண்டும்**
**செய்யுளுக்கு முடிவுரை வேண்டும்**

தமிழ் ஆர்வமிக்கக் கவிஞர்களால் தான் தமிழ் தழைத்து இனிது வளர்ந்து நிற்கின்றது. கா.நமச்சிவாயர் போல் கவிதையை மணி மணியாய் வடிப்பவர் யார்? மணியாய் வடித்த கவிதையை நாமும் அணியாய் எடுத்துத் தமிழ் மகளுக்கு அணிவிப்போமாக!

## மொழியோடு விளையாடு(பக்கம்.19)

### சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.

தேன் **(பெ.ஆ.க-1,செப்.2021)**, விளக்கு, மழை **(பெ.ஆ.க-1,செப்.2021)**, விண் **(செப்.2021)**, மணி **(பெ.ஆ.க-1, செப்.2021)**, விலங்கு, செய், மேகலை **(பெ.ஆ.க-1,செப்.2021)**, வான், பொன், பூ **(செப்.2021)**

எ.கா. பூமணி

- ✓ தேன்மழை
- ✓ விண் விளக்கு
- ✓ பொன் மணி
- ✓ பொன் விலங்கு
- ✓ செய்வான்
- ✓ மணிமேகலை
- ✓ வான் மழை
- ✓ பொன் விளக்கு
- ✓ பூமழை

## எண்ணுப்பெயர்களைக் கண்டுபிடித்துத் தமிழ் எண்களில் எழுதுக.

| தமிழ் எண்கள் | செய்யுள் அடி | எண்ணுப்பெயர் | தமிழ் எண் |
|---|---|---|---|
| 1 - க | நாற்றிசையும் செல்லாத நாடில்லை | நான்கு | ச |
| 2 - உ<br>3 - ௩<br>4 - ச | எறும்புந்தன் கையால் எண்சாண் **(ஏப்.2023)** | எட்டு | அ |
| 5 - ரு | ஐந்து சால்பு ஊன்றிய தூண் **(ஏப்.2023)** | **ஐந்து** | ரு |
| 6 - சூ<br>7 - எ | நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி **(ப.ஆ.க.2)** | **நான்கு, இரண்டு** | ச / உ |
| 8 - அ<br>9 - கூ | ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி | **ஆயிரம்** | க000 |

## அகராதியில் காண்க.

1. **அடவி** - காடு
2. **அவல்** - பள்ளமான நிலம்
3. **சுவல்** - மேடான நிலம்
4. **செறு** -வயல், பகை, பாத்தி
5. **பழனம்** - வயல்
6. **புறவு** - முல்லை நிலம்,தோட்டம், புறா

## காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. (ப.ஆ.க-1, ஜீலை.24)**

**அறியாமையை போக்கும் கல்வி**

| | | |
|---|---|---|
| அறிவு எனும் பூட்டைத் திறக்க<br>நல்ல புத்தகம் என்ற சாவி தேவை.<br>பூட்டிய அறிவின் திறவுகோல்<br>கல்வியே ஆகும்.<br>அதிகம் படித்துவிட்டேன் என்று<br>அகம்பாவம் கொள்ளாதே!<br>என்னால் முடியுமா என்று<br>சோர்ந்து திரியாதே! |  | புத்தகத்தை திற!<br>புதியன கற்றிடு!<br>புத்துலகம் படைத்திடு!<br>நாளை நமதே! நாடும் நமதே!<br>அறியாமை எனும் பூட்டை<br>கல்வியெனும் திறவுகோலால் திறந்திடு!<br>அறியாமை நீக்கி அறிவு பெற்றிடு!<br>வாழ்கைப்போரில் வென்றிடு! |

## நிற்க அதற்குத் தக. (பக்கம் - 20)

**இன்சொல் பேசுவதால் விளையும் நன்மைகள் மற்றும் தீயசொல் பேசுவதால் ஏற்படும் தீமைகளைப் பட்டியலிடுக.**

**(ஜீலை.24)**

| இன்சொல் வழி நன்மைகள் | தீய சொல் வழி தீமைகள் |
|---|---|
| பிறர் மனம் மகிழும் | பிறர் மனம் வாடும் |
| அறம் வளரும் | அறம் தேயும் |
| புகழ் பெருகும் | இகழ் பெருகும் |
| நல்ல நண்பர்கள் சேருவர் | நல்ல நண்பர்கள் விலகுவர் |
| அன்பு நிறையும் | பகைமை நிறையும் |

இதில் நீங்கள் செல்லும் வழி யாது? உங்கள் நண்பருக்குக் காட்டும் வழி யாது?

**நாங்கள் செல்லும் வழி இன்சொல் வழி.**

**எங்கள் நண்பருக்குக் காட்டும் வழி இன்சொல் வழி**

## படிப்போம்! பயன்படுத்துவோம்!

| | | | |
|---|---|---|---|
| **Vowel** | உயிரெழுத்து **(பெ.ஆ.க-1, ஆகஸ்ட்.22, ஜீன்.23)** | **Monolingual** | ஒரு மொழி |
| **Consonant** | மெய்யெழுத்து | **Conversation** | உரையாடல் |
| **Homograph** | ஒப்பெழுத்து **(பெ.ஆ.க-1)** | **Discussion** | கலந்துரையாடல் **(ஆகஸ்ட்.22)** |



## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை – இணையவழி விண்ணப்பப்பதிவு

முழுப்பெயர் : ______________________

பாலினம் : ______________________

கைபேசி எண் : ______________________

மின்னஞ்சல் முகவரி : ______________________

பிறந்த தேதி : ______________________

இரத்த வகை : ______________________

தந்தையின் பெயர் : ______________________

தாயாரின் பெயர் : ______________________

தொடர்பு முகவரி

| கதவு எண் / தெருவின் பெயர்/ கிராமம் (அல்லது) நகரத்தின் பெயர் | மாவட்டம் | அஞ்சல் குறியீட்டு எண் |
|---|---|---|
| | | |

நிரந்தர முகவரி

| கதவு எண் / தெருவின் பெயர்/ கிராமம் (அல்லது) நகரத்தின் பெயர் | மாவட்டம் | அஞ்சல் குறியீட்டு எண் |
|---|---|---|
| | | |

மாநிலம் : தமிழ்நாடு இனம் : இந்தியன்

ஆதார் எண் : *XXXX XXXX XXXX*

உங்கள் புகைப்படத்தைப் பதிவேற்றவும் :



கடவுச்சொல் : *XXXXXXXXXXXXXXX*

கடவுச்சொல்லை உறுதிப்படுத்தவும் : *XXXXXXXXXXXXXXX*

**மாநில அளவில் நடைபெற்ற 'கலைத்திருவிழா' போட்டியில் பங்கேற்று 'கலையரசன்' பட்டம் பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.**

காந்தி தெரு,

10.06.2025

அன்புள்ள நண்பன் அமுதனுக்கு,

வணக்கம். நான் நலமாக இருக்கின்றேன். நீ நலமாக இருக்கின்றாயா? இல்லத்தில் அனைவரும் நலமாக உள்ளார்களா? என்பதை அறிய ஆவலுடன் உள்ளேன். உன்னிடம் இருக்கின்ற கலைத்திறமைகளை உடனிருந்து நான் பார்த்திருக்கின்றேன். பல போட்டிகளில் கலந்துகொண்டு நீ பரிசுகளைப் பெற்றுள்ளாய்.

தமிழ்நாடு அரசு நடத்திய கலைத்திருவிழாப் போட்டிகளிலும் கலந்துகொண்டு மூன்று போட்டிகளில் மாநில அளவில் முதலிடம் பெற்றுள்ளாய். இதன் காரணமாகக் 'கலையரசன்' பட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கைகளால் பெற்றுள்ளாய். உனக்குக் கிடைத்த பெருமையால் நண்பர்கள் அனைவருமே பெருமையும் ஊக்கமும் அடைகிறோம். உன்னைப் போல பட்டங்கள்பெற முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

இதைப்போல, வரக்கூடிய பல போட்டிகளிலும் கலந்துகொண்டு இன்னும் பல பரிசுகளைப் பெற உளமார வாழ்த்துகின்றேன். கோடை விடுமுறையில் நமது கிராமத்தில் சந்திப்போம்.

இப்படிக்கு,

உன் அன்புள்ள நண்பன்,

மா. குறளரசன்.

**உறைமேல் முகவரி**

பெறுநர்

ஆ. தமிழ்ச்செல்வன்,<br>
50, அன்னை இல்லம்,<br>
கபிலர் தெரு,<br>
கோயமுத்தூர் 641 001.

கவிதைப்பேழை

# இயல் 1

# அன்னை மொழியே

– பாவலரேறு பெருஞ்சித்திரனார்

## பலவுள் தெரிக.

1. **கல்போன்ற மனதையும் கற்கண்டாக்குபவள் யார்?**
அ) தமிழ்த்தாய் ஆ) பெற்றதாய்
இ) செவிலித்தாய் ஈ) நற்றாய்
**[அ) தமிழ்த்தாய்]**

2. **பதினெண் மேற்கணக்கு நூல்கள் எனச் சுட்டப்படுபவை எவை? எவை?**
அ) திருக்குறளும், நாலடியாரும்
ஆ) பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும்
இ) சிலப்பதிகாரமும், மணிமேகலையும்
ஈ) மகாபாரதமும் கம்பராமாயணமும்
**[ஆ) பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும்]**

3. **அன்னை மொழியே எனும் பாடலில் சுட்டப்படும் உவமைத் தொடரைக் கண்டறிக.**
அ) செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகார்ந்த அந்தும்பி பாடும் அதுபோல
ஆ) எண்தொகையே! நற்கணக்கே! மன்னுஞ் சிலம்பே! மணிமேகலை வடிவே!
இ) முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
ஈ) உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?
**[அ) செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகார்ந்த அந்தும்பி பாடும் அதுபோல]**

4. **சாகும்போதும் தமிழ்படித்துச் சாக வேண்டும் - என்று பாடியவர் யார்?**
அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார்
ஆ) ஔவையார்
இ) பாரதியார் ஈ) க.சச்சிதானந்தன்
**[ஈ) க.சச்சிதானந்தன்]**

5. **பொருந்தாத கூற்றைக் கண்டறிக.**
அ) பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் துரை. மாணிக்கம் ஆகும்.
ஆ) நம் பாடப்பகுதியில் உள்ள அன்னை மொழியே எனும் பாடல் கனிச்சாறு (தொகுதி-1) தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.
இ) பெருஞ்சித்திரனாரின் திருக்குறள் மெய்ப்பொருளுரை தமிழுக்குக் கருவூலமாய் அமைந்துள்ளது.
ஈ) தென்மொழி, தமிழ்ச்சிட்டு எனும் நூல்களைப் படைத்துள்ளார்.
**[ஈ) தென்மொழி, தமிழ்ச்சிட்டு எனும் நூல்களைப் படைத்துள்ளார்]**

6. **அன்னை மொழியே - கவிதை இடம்பெற்றுள்ள நூல்**
அ) தமிழ்ச்சிட்டு ஆ) நூறாசிரியம்
இ) கனிச்சாறு ஈ) தமிழ் வாழ்த்து
**[இ) கனிச்சாறு]**

7. **தமிழுக்குக் கருவூலமாய் அமைந்த பெருஞ்சித்திரனாரின் நூல் எது?**
அ) திருக்குறள் மெய்ப்பொருளுரை
ஆ) பள்ளிப்பறவைகள்
இ) எண்சுவை எண்பது ஈ) நூறாசிரியம்
**[அ) திருக்குறள் மெய்ப்பொருளுரை]**

8. **'தென்னன் மகளே' - இதிலுள்ள தென்னன் யார்?**
அ) சேரன் ஆ) சோழன்
இ) பாண்டியன் ஈ) பல்லவன்
**[இ) பாண்டியன்]**

9. **'செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகார்ந்த ----- பாடும்.**
அ) குயில் ஆ) தமிழ் இ) தும்பி ஈ) காகம்
**[இ) தும்பி]**

10. **கூற்றுகளை ஆராய்க.**
**கூற்று 1** : பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் துரை மாணிக்கம்
**கூற்று 2** : பெருஞ்சித்திரனாரின் நூல்கள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

அ) கூற்று 1, 2 சரி ஆ) கூற்று 1 சரி 2 தவறு
இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று 1, 2 தவறு

**[அ) கூற்று 1, 2 சரி]**

11. **பாவலரேறு பெருஞ்சித்திரனார் எழுதிய நூல் அல்லாதது**
அ) உலகியல் நூறு ஆ) நூறாசிரியம்
இ) தமிழ்ச்சிட்டு ஈ) பள்ளிப் பறவைகள்

**[இ) தமிழ்ச்சிட்டு]**

12. **துரை.மாணிக்கம் தமிழுணர்வை உலகெங்கும் பரப்பக் காரணமாக இருந்த இதழ்**
அ) தென்மொழி ஆ) கனிச்சாறு
இ) மகபுகுவஞ்சி ஈ) நூறாசிரியம்

**[அ) தென்மொழி]**

13. **'கன்னிக்குமரிக் கடல் கொண்ட நாட்டிடையில் மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!' - இத்தொடரில் அமைந்த நயம்**
அ) எதுகை, மோனை ஆ) மோனை, இயைபு
இ) இயைபு, முரண் ஈ) முரண், எதுகை

**[அ) எதுகை, மோனை]**

14. **'இன்னறும் பாப்பத்தே! எண் தொகையே! நற்கணக்கே' - இத்தொடரில் சுட்டப்பெறும் நூல்களின் மொத்த எண்ணிக்கை**
அ) 19 ஆ) 36 இ) 46 ஈ) 56

**[ஆ) 36]**

15. **பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் யாது?**
அ) துரைக்கண்ணு ஆ) துரை சித்திரனார்
இ) துரை மாணிக்கம் ஈ) துரை ராசு

**[இ) துரை மாணிக்கம்]**

16. **கடல் கொண்ட கண்டம் எது?**
அ) ஆசியக் கண்டம் ஆ) ஆப்பிரிக்கக் கண்டம்
இ) ஐரோப்பாக் கண்டம் ஈ) குமரிக் கண்டம்

**[ஈ) குமரிக் கண்டம்]**

17. **பாண்டிய மன்னனின் மகளாகக் குறிப்பிடப்படுபவர் யார்?**
அ) கன்னிக்குமரி ஆ) மணிமேகலை
இ) தமிழ்மொழி ஈ) தும்பி

**[இ) தமிழ்மொழி]**

18. **நற்கணக்கே என்னும் தொடர் உணர்த்தும் நூல்களின் எண்ணிக்கை?**
அ) 10 ஆ) 8 இ) 18 ஈ) 96

**[இ) 18]**

## இலக்கணக் குறிப்பு தருக.

1. **செந்தமிழே! அன்னையே! மொழியே!** - விளித்தொடர்
2. **செந்தாமரை** - பண்புத்தொகை
3. **வாழ்த்துவமே** - தன்மைப் பன்மை வினைமுற்று
4. **இலக்கியமும் புகழுரையும்** -எண்ணும்மை

## பகுபத உறுப்பிலக்கணம் தருக.

**முகிழ்த்த** - **முகிழ் + த் + த் + அ**
**முகிழ்** - பகுதி
**த்** - சந்தி
**த்** - இறந்தகால இடைநிலை
**அ** - பெயரெச்ச விகுதி

## புணர்ச்சி விதி தருக.

**செந்தாமரை** -செம்மை + தாமரை
**ஈறுபோதல்** -செம்மை + தாமரை ('மை' விகுதி கெடல்)
**முன்னின்ற மெய் திரிதல்** -செந்தாமரை ('ம்' 'ந்' ஆகத் திரிதல்)

## குறுவினா

**1. 'பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!' - இத்தொடரில் சுட்டப்பெறும் நூல்கள் யாவை?**

- பாப்பத்தே - பத்துப்பாட்டு
- எண்தொகையே - எட்டுத்தொகை
- நற்கணக்கே - பதினெண்கீழ்க்கணக்கு

**2. பெருஞ்சித்திரனார் தமிழ் உணர்வைப் பரப்ப நடத்திய இதழ்கள் யாவை?**

- தென்மொழி
- தமிழ்ச்சிட்டு

**3. பெருஞ்சித்திரனார் படைத்த நூல்களை எழுதுக.**

- உலகியல் நூறு
- பாவியக்கொத்து
- நூறாசிரியம்
- கனிச்சாறு
- எண்சுவை எண்பது
- மகபுகுவஞ்சி
- பள்ளிப்பறவைகள்
- திருக்குறள் மெய்ப்பொருளுரை

## சிறுவினா

**1. பாவலரேறு பெருஞ்சித்திரனார் குறிப்பு வரைக.**

- பாவலரேறு பெருஞ்சித்திரனார் 10-03-1933 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்திலுள்ள சமுத்திரம் என்னும் ஊரில் துரைசாமி-குஞ்சம்மாள் இணையருக்கு மகனாகப் பிறந்தார்.
- இவருக்குப் பெற்றோர் 'துரை மாணிக்கம்' என்று பெயர் சூட்டினர்.
- இவர் கமலம் என்ற தாமரையம்மையாரை மணம் முடித்துக் கொண்டார்.
- இவர் அஞ்சல் துறை உதவியாளராகப் புதுவையில் தனது பணியைத் தொடங்கினார்.
- இவர் உலகியல் நூறு, பாவியக்கொத்து, நூறாசிரியம், கனிச்சாறு, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி , பள்ளிப்பறவைகள் முதலிய நூல்களைப் படைத்துள்ளார்.
- இவரின் திருக்குறள் மெய்ப்பொருளுரை தமிழுக்குக் கருவூலமாய் அமைந்தது.
- இவர் தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களின் வாயிலாகத் தமிழுணர்வை உலகெங்கும் பரப்பினார்.
- இவர் உடல் நலக்குறைவால் 11-06-1995-ல் காலமானார்.
- இவரது நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

## கற்பவை கற்றபின்(பக்கம்.3)

**''நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று**
**இத்திறத்த எட்டுத்தொகை''**

**- இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள எட்டுத்தொகை நூல்களைப் பெயர்க் காரணத்துடன் எடுத்துக்காட்டுக.**

**நற்றிணை:**

- நற்றிணை அகத்திணை இலக்கியமாகும்.
- பாடல்களின் எண்ணிக்கை 400.
- பாடிய புலவர்களின் எண்ணிக்கை - 192.
- இந்நூலைத் தொகுத்தவர் யாரெனத் தெரியவில்லை; தொகுப்பித்தவர் பன்னாடு தந்த மாறன் வழுதி;
- இதன் அடி வரையறை 9 அடி முதல் 12 அடி வரை.
- இது அகவற்பாவால் ஆனது.

**குறுந்தொகை:**

- குறுந்தொகை அகத்திணை இலக்கியம்.
- பாடல்களின் எண்ணிக்கை 402.
- பாடிய புலவர்களின் எண்ணிக்கை 205.

- அடிவரையறை 4 அடி முதல் 8 அடி வரை.
- இதைத் தொகுத்தவர் பூரிக்கோ.
- தொகுப்பித்தவர் யாரெனத் தெரியவில்லை.

**ஐங்குறுநூறு:**

- ஐங்குறுநூறு அகப்பொருள் இலக்கியம்.
- பாடல்களின் எண்ணிக்கை 500.
- திணைக்கு நூறு பாடல்கள் பாடப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு திணையும் பத்துப்பத்தாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- அடிவரையறை மூன்று அடி முதல் 6 அடி வரை.
- பாடியோர் குறிஞ்சி- கபிலர், முல்லை- பேயனார், மருதம்- ஓரம்போகியார், நெய்தல்- அம்மூவனார், பாலை- ஓதலாந்தையார்.
- தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்க் கிழார்.
- தொகுப்பித்தவர் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை.

**பதிற்றுப்பத்து:**

- பதிற்றுப்பத்து புறப்பொருள் பற்றிய தொகை நூல் புறநானூறு போல மூவேந்தர்களையும் குறுநிலமன்னர்களையும் பாடாமல் சேர மன்னர்களைப் பற்றியே பாடிய தொகை நூல்.
- ஒவ்வொரு மன்னனைப் பற்றியும் பத்துப்பாடல்கள் வீதம் பத்துச் சேரமன்னர்களைப் பற்றி வெவ்வேறு புலவர்கள் பாடியிருப்பது இந்நூலின் தனிச்சிறப்பாகும்.
- முதல் பத்தும் இறுதிப்பத்தும் இன்று வரை கிடைக்கவில்லை. எஞ்சிய எட்டுப்பத்தில் உள்ள 80 பாடல்கள் கிடைத்துள்ளன.

**பரிபாடல்:**

- பரிபாடல் என்பது பாவகைகளில் ஒன்றாகும்.
- தொல்காப்பியர் பரிபாட்டு அகப்பொருளில் வரும் என்று குறிப்பிடுகிறார்.
- பாவகையால் பெயர் பெற்ற நூல் அகத்திற்கும், புறத்திற்கும் உரிய நூல்.
- இது இசைப்பாடலாகும்.
- இது பாண்டிய மன்னர்களைச் சிறப்பித்துக் கூறுகிறது.
- ‘ஓங்கு பரிபாடல்’ என்று சிறப்பிக்கப்படுகிறது.
- இறையனார் களவியல் உரைமூலம் 70 பாடல்கள் உண்டு என அறிய முடிகிறது. ஆனால் 24 பாடல்களே கிடைத்துள்ளன.
- பரிபாடலைப் பாடிய புலவர்கள் 13 பேர்.

**கலித்தொகை:**

- கலித்தொகை அகப்பொருள் நூலாகும்.
- கலிப்பாவால் ஆனது.
- 150 பாடல்களைக் கொண்டது.
- பாலை, குறிஞ்சி , மருதம், முல்லை, நெய்தல் என்ற வரிசையில் அமைந்துள்ளது.
- இதைத் தொகுத்தவர் நல்லந்துவனார்.
- பாடிய புலவர்கள் பாலை- பெருங்கடுங்கோன், குறிஞ்சி- கபிலர், மருதம்- இளநாகனார், முல்லை- சோழன் நல்லுருத்திரன், நெய்தல்- நல்லந்துவனார்

**அகநானூறு:**

- அகநானூறு அகப்பொருள் நூலாகும்.
- பாடல்களின் எண்ணிக்கை 400.
- பாடிய புலவர்களின் எண்ணிக்கை 145.
- தொகுத்தவர் உப்பூரிக்குடிக்கிழார் மகனார் உருத்திரசன்மனார்.
- தொகுப்பித்தவர் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி.
- அடிவரையறை 13 அடி முதல் 31 அடி வரை.
- நீண்ட பாடல்களைப் பெற்றிருப்பதால் ‘நெடுந்தொகை’ என்ற பெயரும் உண்டு.

**புறநானூறு:**

- புறநானூறு புறப்பொருள் இலக்கியமாகும்.
- பாடல்களின் எண்ணிக்கை 400.
- பாடிய புலவர்களின் எண்ணிக்கை 158.
- அகவற்பாவால் ஆனது.
- புறநானூற்றில் 11 புறத்திணைகளும் 65 துறைகளும் எடுத்தாளப்பட்டுள்ளன.
- உழிஞைத் திணைக்குரிய பாடல்கள் இல்லை.

உரைநடை உலகம்

# இயல் 1

## பாவாணர் பார்வையில் தமிழ்ச்சொல் வளம்

### பலவுள் தெரிக.

**1. பொருத்துக.**

1. தாள் - அ) நெட்டி, மிளகாய்ச்செடி
2. கோல் - ஆ) புளி, வேம்பு
3. தண்டு - இ) நெல், கேழ்வரகு
4. அடி - ஈ) கீரை, வாழை

அ) 1-இ, 2-அ, 3-ஈ, 4-ஆ
ஆ) 1-இ, 2-ஈ, 3-அ, 4-ஆ
இ) 1-ஈ, 2-அ, 3-ஆ, 4-இ
ஈ) 1-ஆ, 2-அ, 3-இ, 7-ஈ

**[அ) 1-இ, 2-அ, 3-ஈ, 4-ஆ]**

**2. பொருந்தாத இணையைக் கண்டறிக.**

அ) கவை - அடிமரத்தினின்று பிரியும் மாபெரும் கிளை
ஆ) கொப்பு - கவையின் பிரிவு; கிளை - கொப்பின் பிரிவு
இ) போத்து - கிளையின் பிரிவு; சினை - போத்தின் பிரிவு
ஈ) குச்சு - போத்தின் பிரிவு; இணுக்கு - குச்சியின் பிரிவு

**[இ) போத்து - கிளையின் பிரிவு; சினை - போத்தின் பிரிவு]**

**3. 'தமிழ்ச்சொல்வளம்' என்னும் கட்டுரை இடம் பெற்ற நூல்**

அ) சொல்லாய்வுக் கட்டுரைகள்
ஆ) சொற்பிறப்பியல் அகராதி
இ) சொல்லாராய்ச்சி வரலாறு
ஈ) செஞ்சொல் மாலை

**[அ) சொல்லாய்வுக் கட்டுரைகள்]**

**4. பொருத்துக.**

1. கொத்து - அ) கொடி முந்திரி
2. குலை - ஆ) வாழை
3. கதிர் - இ) அவரை, துவரை
4. தாறு - ஈ) கேழ்வரகு, சோளம்

i) 1-ஆ, 2-அ, 3-ஈ, 4-இ
ii) 1-இ, 2-அ, 3-ஈ, 4-ஆ
iii) 1-இ, 2-ஈ, 3-ஆ, 4-அ
iv) 1-ஈ, 2-ஆ, 3-அ, 4-இ

**[ii) 1-இ, 2-அ, 3-ஈ, 4-ஆ]**

**5. பொருத்தமற்றதைக் கண்டறிக.**

அ) நெல், கத்திரியின் இளநிலை- நாற்று
ஆ) தென்னையின் இளநிலை- குருத்து
இ) மா, புளியின் இளநிலை-கன்று
ஈ) விளவின் இளநிலை- குட்டி

**[ஈ) விளவின் இளநிலை- குட்டி]**

**6. உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவி அதன் தலைவராக இருந்தவர்**

அ) அப்பாதுரையார் ஆ) பாவாணர்
இ) இளங்குமரனார் ஈ) பெருஞ்சித்திரனார்

**[ஆ) பாவாணர்]**

**7. 1554-இல் ---- என்னும் நூல் முதன்முதலாகத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.**

அ) கார்டிலா ஆ) ரோமன்
இ) கேர்டியாலா ஈ) பாப்பேஜ் **[அ) கார்டிலா]**

**8. காலவெள்ளத்தில் கரைந்துபோன மொழிகளுக்கிடையில் நீந்தித் தன்னை நிலைநிறுத்திக் கொண்ட மொழி**

அ) தமிழ் ஆ) வடமொழி
இ) தெலுங்கு ஈ) மலையாளம் **[அ) தமிழ்]**

**9. 'நாடும் மொழியும் நமதிரு கண்கள்' என்று பாடியவர் யார்?**

அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார்
ஆ) ஔவையார் இ) பாரதியார்
ஈ) க.சச்சிதானந்தன் **[இ) பாரதியார்]**

**10. பொருந்தாத இணையைக் கண்டறிக.**

அ) கொப்பு, சினை, போத்து, கவை - தாவரங்களின் கிளைப் பிரிவுகள்

ஆ) தாள், தோகை, ஓலை, சண்டு - தாவரங்களின் இலைவகைகளைக் குறிக்கும்

இ) கொத்து, தாறு, கதிர், குலை - தானியங்களுக்கு வழங்கும் பெயர்கள்

ஈ) தொலி, ஓடு, மட்டை, தோடு - பழத்தோலின் மேல்பகுதியினைக் குறிக்கும்

**[இ) கொத்து, தாறு, கதிர், குலை - தானியங்களுக்கு வழங்கும் பெயர்கள்]**

**11. சரியான நிறுத்தற்குறியினைக் கண்டறிக.**

அ) ''தமிழாசிரியர்'' நூலாக்கப் பணிகளை விரும்பிச் செய்பவர், சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார்.

ஆ) தமிழாசிரியர், நூலாக்கப் பணிகளை விரும்பிச் செய்பவர், சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார்.

இ) தமிழாசிரியர், 'நூலாக்கப் பணிகளை விரும்பிச் செய்பவர்', சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார்.

ஈ) தமிழாசிரியர்; நூலாக்கப் பணிகளை விரும்பிச் செய்பவர்; சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார்.

**[ஈ) தமிழாசிரியர்; நூலாக்கப் பணிகளை விரும்பிச் செய்பவர்; சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார்.]**

## குறுவினா

**1. உலகத்தமிழ்க் கழகத்தை நிறுவி அதன் தலைவராக இருந்தவர் யார்?**

- மொழி ஞாயிறு என்று அழைக்கப்படும் தேவநேயப்பாவாணர்.

**2. முதன்முதலாகத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நூல் எது? அந்நூல் எந்த வடிவில் அச்சிடப்பட்டிருந்தது?**

- போர்ச்சுக்கீசு நாட்டின் கார்டிலா எனும் நூல் 1554-ல் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது.
- அந்நூல் ரோமன் வரி வடிவத்தில் அச்சிடப்பட்டிருந்தது.

**3. தமிழ்நாட்டு நெல் வகைகளைக் குறிப்பிடுக.**

- செந்நெல், வெண்ணெல், கார்நெல், சம்பா நெல், மட்டை நெல் முதலிய நெல்வகைகள் தமிழ்நாட்டில் உள்ளன.

**4. சம்பா நெல்வகைகளுள் சிலவற்றைக் குறிப்பிடுக.**

- ஆவிரம் பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச்சம்பா, சிறுமணிச்சம்பா, சீரகச் சம்பா எனச் சம்பாவில் அறுபது உள்வகைகள் உள்ளன.

**5. தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?**

- இலை, தாள், தோகை, ஓலை, சண்டு, சருகு முதலியன தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்களாகும்.

**6. சிறந்த மதிநுட்பமும் பண்பாடும் உடைய மக்களுக்கே இயலும் செயல் யாது?**

- பொருளைக் கூர்ந்து நோக்கி நுண்பாகுபாடு செய்து அவற்றிற்கேற்பப் பருப்பொருட் சொற்களும் நுண்பொருள் சொற்களும் அமைத்துக் கொள்வது சிறந்த மதிநுட்பமும் பண்பாடும் உடைய மக்கட்கே இயலும் செயலாகும்.

## சிறுவினா

**1. தாவரங்களின் இலை வகை, கொழுந்து வகை குறித்து விளக்குக.**

**இலை வகை:**

- இலை - புளி, வேம்பு முதலியவற்றின் இலை; தாள் - நெல், புல்லின் இலை; தோகை- சோளம், கரும்பின் இலை; ஓலை - தென்னை, பனையின் இலை; சருகு - காய்ந்த இலை, காய்ந்த தாள்; தோகை - சண்டு.

## கற்பவை கற்றபின் (பக்கம்.7)

1. **சொல்லுதல் என்பதற்குப் பேசுதல், விளம்புதல், செப்புதல், உரைத்தல், கூறல், இயம்பல், மொழிதல் எனப் பல சொற்கள் உள்ளன. இதைப் போன்று மழை, கடல், யானை போன்றவற்றிற்கு வழங்கப்படும் பல்வேறு பெயர்களைத் தொகுத்து வகுப்பறையில் வழங்குக.**

   **பல்வேறு பெயர்கள்**

   மழை - தூறல், சாரல், புயல், கார் மாரி

   கடல் - சமுத்திரம், முந்நீர், ஆழி, பௌவம், அழுவம், ஆர்கலி, குரவை, துறை

   யானை - கரி, வேழம், வாரணம், களிறு, குஞ்சரம், களபம், கைம்மா, உம்பர்

2. **நாம் பேசும் மொழியில் அதிகமான சொற்களை ஆள்வதால் ஏற்படும் பயன்கள் குறித்து வகுப்பில் கலந்துரையாடுக.**

   **தமிழ் மொழியில் அதிகமான சொற்களை ஆள்வதால் ஏற்படும் பயன்கள்:**

   1. நமது உணர்வுகளை எல்லாம் வெளிப்படுத்த முடியும்.
   2. ஆழமான சொல்லறிவைப் பெறலாம்
   3. பேசும் திறனைச் சீர்ப்படுத்தலாம்
   4. சிந்தனைத் திறன் விரிவடையும்
   5. எழுத்து மற்றும் இலக்கியத் திறன் வளரும்
   6. புகழ்பெற்ற இலக்கியங்களை விரிவாகப் புரிந்து கொள்ளலாம்
   7. சொற்களைச் சரியாகப் பயன்படுத்துவதால் மன அழுத்தம் குறையும்
   8. படைப்பாற்றல் திறன் வளரும்
   9. தமிழ் மொழியின் செழுமை நிலைக்கும்
   10. புதிய தலைமுறையினர் கண்டுபிடிப்புகளுக்கும் தமிழில் பெயர் சூட்டலாம்.

---

இயல் 1

கவிதைப்பேழை

# காலக்கணிதம்

*– கண்ணதாசன்*

## பலவுள் தெரிக.

1. **கண்ணதாசனின் இயற்பெயர்**

   அ) மருதையன் ஆ) முத்தையா

   இ) முத்துசாமி **[ஆ) முத்தையா]**

2. **கண்ணதாசன் முதன்முதல் திரைப்படத்திற்குப் பாடல் எழுதிய ஆண்டு**

   அ) 1959 ஆ) 1947 இ) 1949 **[இ) 1949]**

3. **கண்ணதாசனின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல்**

   அ) சேரமான் காதலி ஆ) இயேசு காவியம்

   இ) மாங்கனி **[அ) சேரமான் காதலி]**

4. **கண்ணதாசன் அட்சயப் பாத்திரம் என்று குறிப்பிடுவது**

   அ) ஞானம் ஆ) தத்துவம் இ) பண்பாடு

   **[ஆ) தத்துவம்]**

5. **'வண்டாய் எழுந்து மலர்களிலே அமர்வேன்' - எனக் கூறியவர்**

அ) கண்ணதாசன் ஆ) பாரதிதாசன்

இ) சுரதா **[அ) கண்ணதாசன்]**

## குறுவினா

1. **புகழ்ச்சியையும், இகழ்ச்சியையும் எவ்வாறு ஏற்பதாகக் கண்ணதாசன் குறிப்பிடுகிறார்?**
   - புகழ்ந்தால் என்னுடல் புல்லரிக்காது.
   - இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது.
     - என்பதன் மூலம் புகழ்ச்சியையும், இகழ்ச்சியையும் கண்ணதாசன் ஒன்றாக எண்ணும் பாங்கை அறிய முடிகிறது.

2 **கண்ணதாசன் குறிப்பு வரைக.**
   - சிவகங்கை மாவட்டம் சிறுகூடல் பட்டியில் பிறந்தவர்.
   - பெற்றோர் சாத்தப்பன் - விசாலாட்சி.
   - இயற்பெயர் முத்தையா.
   - கலங்காதிரு மனமே - முதல் திரைப்படப்பாடலாகும்.
   - சேரமான் காதலி எனும் புதினத்திற்காகச் சாகித்திய அகாதெமி விருது பெற்றார்.
   - இலக்கிய உலகில் சிறந்து விளங்கியவர்.
   - சிறந்த கவியரங்கக் கவிஞராகவும் பேச்சாளராகவும் திகழ்ந்தவர்.
   - திரைப்படப்பாடல்கள் வழியாக எளிய முறையில் மெய்யியலை மக்களிடையே கொண்டு சேர்த்தவர்.
   - தமிழக அரசின் அரசவைக் கவிஞராக இருந்திருக்கிறார்.

3. **கவிஞன் என்பவன் யார்?**
   - மனம் என்னும் வயலில் சொல்லேர் உழவனாக, சிந்தனை விதைகளைத் தூவி, மடமைக்களைபறித்து, தத்துவ நீர் பாய்ச்சி , அறம் என்னும் கதிர் அறுப்பவனே கவிஞன் ஆவான்.

4. **புகழும்போதும் இகழும்போதும் கவிஞர் கொள்ளும் மனநிலை யாது?**
   - ஒருவரால் தான் புகழப்படும்போது தன் உடல் புல்லரிக்காது என்றும், ஒருவரால் தாம் இகழப்படும்போது தமது மனமானது உணர்வுகளை இழந்து இறந்துவிடாது என்றும் கவிஞர் தம் உடல் உள்ள உணர்வுகளைத் தெளிவுபடுத்துகிறார்.

5. **மாறாதிருப்பவை எவை எனக் கண்ணதாசன் குறிப்பிடுகிறார்?**
   - கல், மரம், காடு, மேடு ஆகியன தம் இயல்பில் மாறாதிருப்பன என்று கண்ணதாசன் குறிப்பிடுகிறார்.

6. **நாட்டின் சட்டமாக மாறப்போவது எது எனக் கவிஞர் கூறுகிறார்?**
   - கவிஞராகிய தாம் கூறுவதே நாட்டின் சட்டமாக மாறப்போகிறது என்று கவிஞர் கூறுகிறார்.

## கற்பவை கற்றபின்(பக்கம்.9)

1. **கவிதைகளை ஒப்பிட்டுக் கருத்துரைக்க.**

**கவிச்சக்கரவர்த்தியும், கவியரசும்**

**கம்பர்:**

**நதியின் பிழையன்று; நறும்புனலின்மை; அற்றே**
**பதியின் பிழையன்று; பயந்து நமைப் புரந்தாள்**
**மதியின் பிழையன்று; மகன் பிழையன்று; மைந்த!**
**விதியின் பிழை; நீ இதற்கென்ன வெகுண்டதென்றான்**

**- கம்பன்**

- இந்தப் பாடல் எழுந்த சூழல் என்னவென்றால், தசரதனிடம் வரத்தைப் பெற்ற கைகேயி தனது மகன் பரதனை அரசனாக்க நினைக்கிறாள். அதற்குத் தடையாக இருக்கும் இராமனைத் தசரதனை வைத்தே காட்டிற்குச் செல்ல கட்டளையிட வைக்கிறாள். இராமன் தன் தந்தை சொல்லை மதித்துக் காட்டிற்குச் செல்ல ஆயத்தமாகிறார்.
- இந்தச் சூழ்ச்சியைக் கண்ட இலக்குவன் தன் அண்ணன் இராமன் ஏமாற்றப்பட்டதை நினைத்து கைகேயியைத் தாக்குதற்குப் பாய்கிறான்.
- அந்தச் சூழலில்தான் இராமன் இந்தப் பாடலைப் பாடுவதாகக் கம்பர் எழுதியிருக்கிறார்.
- இலக்குவா, ஏன் வீணாகக் கோபம் கொள்கிறாய்?

**நதியானது நீர் இல்லாமல்**
**வறண்டு போய் அழகற்று இருந்தால்**
**அது அந்த நதியின் குற்றமா? இல்லையே.**
**மழை பெய்யாமல் போனதற்கு**
**நதி மீது நாம் பிழை சொல்லலாமா?**

அது போலத்தான் இதுவும்.

- தாய் கைகேயி மீதும் குற்றம் சுமத்த முடியாது.
- தம்பி பரதன் மீதும் குற்றம் சுமத்த முடியாது.
- வரம் கொடுத்து, நம்மை வனத்திற்குப் போகச் சொல்லும் தந்தை மீதும் குற்றம் சுமத்த முடியாது.
- இது விதியின் பிழை.
- விதி இப்படி அமைந்து விட்டது.
- இதற்குப் பாவம் அவர்கள் என்ன செய்வார்கள்.

- இதற்காகவா நீ சினம் கொள்கிறாய்? வேண்டாம். பிறர் செய்யும் தவறுகளை மன்னித்து அவர்களை அன்புடன் நடத்த வேண்டும் என்பதைக் கம்பர் எத்துணை அழகாகக் கூறியிருக்கிறார்.

**கண்ணதாசன்:**

**நதிவெள்ளம் காய்ந்து விட்டால்**
**நதிசெய்த குற்றம் இல்லை**
**விதிசெய்த குற்றம் அன்றி**
**வேறு - யாரம்மா!**

**- கண்ணதாசன்**

- கண்ணதாசன் இலக்கிய கருத்துகளைப் பாமரரும் புரியும் எளிய வடிவில் கொடுப்பதில் வல்லவர்.
- அது போலத்தான் கம்பரின் பாடல் வரிகளைக் கண்ணதாசன் தியாகம் என்னும் திரைப்படத்தில் வரும் பாடல் வரிகளாக மாற்றியுள்ளார்.

**நதி வெள்ளம் காய்ந்து விட்டால்**
**நதி செய்த குற்றம் இல்லை**
**விதி செய்த குற்றம் அன்றி**
**வேறு - யாரம்மா!**

என்று விதியின் வலிமையை மிக அருமையாக விளக்கியுள்ளார்.

**தியாகம்:**

- தியாகத்தைக் கம்பரும் கண்ணதாசனும் விதியுடன் ஒப்பிட்டு விளக்கியது அருமை.

2. **கண்ணதாசனின் கவியரங்கக் கவிதையைச் சுவைத்து அது குறித்து உரையாற்றுக.**

கதிர் வெடித்துப் பிழம்பு விழ
கடல் குதித்துச் சூடாற்ற
முதுமை மிகு நிலப் பிறப்பின்
முதற் பிறப்புத் தோன்றி விட
நதி வருமுன் மணல் தரு முன்
நலம் வளர்த்த தமிழணங்கே
பதி மதுரைப் பெருவெளியில்
பாண்டியர் கை பார்த்தவளே!

நின்னை யான் வணங்குவதும்
நீ என்னை வாழ்த்துவதும்
அன்னை மகற்கிடையே
அழகில்லை என்பதனால்
உன்னை வளர்த்து வரும்
ஒண் புகழ் சேர் தண் புலவர்
தன்னை வணங்குகின்றேன்
தமிழ்ப் புலவர் வாழியரோ!

- இந்தப் பாடல் இயற்கையின் விசித்திரங்களையும் அதன் தாக்கத்தையும் கவிதைமயமாக வெளிப்படுத்துகிறது.
- ஒளி, கடல், மணல், நிலப்பரப்பு போன்றவை ஒவ்வொன்றும் கண்முன்னே விரியும் ஒரு பார்வையை உருவாக்குகின்றன.
- சொற்களின் ஒழுங்குமுறை இசைநயத்தைத் தந்து கவிதையை இனிமையாக்குகிறது.
- இயற்கையுடன் மனிதனின் உறவையும் காலத்தின் மாறுபாட்டையும் நுட்பமாக உணர்த்துகிறது.
- இந்த வரிகள் தமிழின் தொன்மையையும் உயர்வையும் கவிநயத்துடன் விளக்குகின்றன.

---

**இயல் 1**

விரிவானம்

# புயலிலே ஒரு தோணி

– ப.சிங்காரம்

## கற்பவை கற்றபின்(பக்கம்.12)

2. **நீங்கள் எதிர்கொண்ட இயற்கை இடர் குறித்து விவரித்து எழுதுக.**
**(மழை, வெள்ளம், புயல், வறட்சி)**

- ❖ கடலூர் மாவட்டத்தைச் சார்ந்த நான் 'தானே' புயலைச் சந்தித்திருக்கிறேன். நான் கண்ட அனுபவங்களைத் தங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன்.
- ❖ 29.12.2019 அன்று இரவு யாரும் எதிர்பாராத இயற்கைச் சீற்றம் எங்களைப் புரட்டிப்போட்டது. பேய் வரும் காட்சிகளை இசைப்பின்னணியில் காட்டும் காட்சிபோல ஓ..ஓ..ஓ.. என்ற பெருத்த ஒசையுடன் காற்றுவீசியது. ஓடுகள் பறந்தன. கூரை வீடுகள் காற்றில் பிய்த்து எறியப்பட்டன.
- ❖ வெளியில் வந்து எட்டிப் பார்க்கவும் முடியாத நிலை. கண்ணாடிச் சன்னல்கள் நொறுங்கி விழுந்தன. காற்றுடன் பலத்தமழை. வீட்டினுள் வெள்ளக்காடு. எங்கும் கும் இருட்டு.
- ❖ உலகம் இத்துடன் அழிவுக்குள் வந்துவிட்டது. இரவோடு இரவாக எல்லோரும் இறந்துவிடப்போகிறோம். நாளை விடியல் இல்லை என அழுகை முட்டிக்கொட்டியது. பயம் தொற்றிக்கொண்டது.

❖ மடமட என மரங்கள் விழுந்தன. ஆங்காங்கே ஓலக்குரல். விளக்கேற்றவும் வழியில்லாமல் மூன்று மணி நேரம் 'செத்தோம்' என்று இருந்தது.

❖ மழை கொட்டோ கொட்டென்று கொட்டி தீர்த்தது. மெல்ல மெல்ல விடிந்தது. வீடு இல்லாமல் வீதியில் நின்றனர் பலர். முகவரி இல்லாமல் வீதியே வீதியில் கிடந்தது.

❖ மின்கம்பங்கள் முறிந்து கிடந்தன. மரங்கள் வேரோடு சரிந்து கிடந்தன. கட்டிடங்கள் காணாமல் போயிருந்தன.

❖ சாலைகள் தொலைந்து போயின. இருட்டிலே மாதங்கள் கழிந்தன. குடிநீர் இல்லை. உணவிற்கு வழியில்லை. காயில்லை கனியில்லை. மின்சாரம் இல்லை. நிம்மதி இல்லை. எதுவுமில்லாமல் அல்லாடினோம். வெளிமாவட்டத்தினர் நிவாரணப்பொருட்களைக் கொண்டு வந்தனர்.

❖ அதை வாங்க வரிசையில் முந்தியடித்து நின்றோம். மெழுகுவர்த்தி இல்லாமல் அல்லாடிய காலம் அது. ரொட்டிப் பொட்டலங்கள் எங்கள் இல்லங்களைத்தேடி வரும். பாலுக்கு அழும் குழந்தைகள். பள்ளிகள் திறக்கவில்லை.

❖ வழிபாடு இல்லை. வாழ வழியில்லாமல் அல்லாடினோம். ஒவ்வொன்றாகச் சரி செய்து சரி செய்து இயல்பு நிலைக்குத் திரும்ப பல மாதங்கள் ஆகின.

❖ இனி ஒரு இயற்கைச் சீற்றம் வரக்கூடாது என இறைவனிடம் வேண்டிக்கொண்டோம். இவற்றையெல்லாம் நினைத்தாலே இன்றும் உள்ளம் நடுங்குகிறது.

---

கற்கண்டு

# இயல் 1 — சொல்

## பலவுள் தெரிக.

**1. விகுதி பெற்ற தொழிற்பெயருக்குச் சான்று**

அ) நடவாமை ஆ) நடத்தை

இ) வாழ்க்கை ஈ) இனிமை **[இ) வாழ்க்கை]**

**2. வினையடியுடன் விகுதி சேர்வதால் உருவாகும் தொழிற்பெயர்**

அ) விகுதி பெற்ற தொழிற்பெயர்

ஆ) எதிர்மறைத் தொழிற்பெயர்

இ) வினையடை

ஈ) முதல்நிலைத் திரிந்த தொழிற்பெயர்

**[அ) விகுதி பெற்ற தொழிற்பெயர்]**

**3. கண்ணன் படித்தான் என்பது**

அ) தனிமொழி ஆ) தொடர்மொழி

இ) பொதுமொழி ஈ) வினையெச்சம்

**[ஆ) தொடர்மொழி]**

**4. முதனிலை திரிந்த தொழிற்பெயர்**

அ) கெடுதல் ஆ) கெடு

இ) கேடு ஈ) கொடு **[இ) கேடு]**

## குறுவினா

1. **விகுதி பெற்ற தொழிற்பெயர் என்பது யாது?**
   - வினையடியுடன் விகுதி சேர்வதால் உருவாகும் தொழிற்பெயர் விகுதி பெற்ற தொழிற்பெயர் ஆகும்.

   **சான்று:** வினையடி விகுதி தொழிற்பெயர்
   நட தல் நடத்தல்

2. **எதிர்மறைத் தொழிற்பெயர் என்றால் என்ன?**
   - ஒரு செயல் நடக்காமல் இருப்பதனைச் சொல்வது எதிர்மறை ஆகும்.
   - ஒரு தொழிற்பெயர் எதிர்மறைப் பொருளில் வருவது எதிர்மறைத் தொழிற்பெயர் எனப்படும்.

   **நடத்தல்** - தொழிற்பெயர்.
   **நடவாமை** - எதிர்மறைத் தொழிற்பெயர்.

3. **முதனிலைத் தொழிற்பெயர் என்றால் என்ன? எ-கா. தருக.**
   - ஒரு தொழிற்பெயர் விகுதி பெறாமல் பகுதி மட்டுமே நின்று தொழிற்பெயரானால் அது ''முதனிலைத் தொழிற்பெயர்'' எனப்படும்.

   பாடுதல் - தொழிற்பெயர்
   பாடு - முதனிலைத் தொழிற்பெயர்.

4. **முதனிலை திரிந்த தொழிற்பெயரை விளக்குக.**
   - விகுதி பெறாமல் பகுதி திரிந்து வருவதுமுதனிலை திரிந்த தொழிற்பெயராகும்.

   எ.கா. பெறுதல் - பெறு - பேறு

5. **சொல் என்றால் என்ன?**
   - ஓர் எழுத்து தனித்தோ பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள்தரும் வகையில் அமைவது சொல் ஆகும்.

6. **வினையாலணையும் பெயரை விவரி?**
   - ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபை ஏற்றும் ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடிவது வினையாலணையும் பெயர் எனப்படும்.
   - இது மூன்று இடங்களிலும் மூன்று காலங்களிலும் வரும்.

## சிறுவினா

1. **மூவகை மொழிகள் யாவை? விளக்குக.**
   - **மொழி-** தனிமொழி, தொடர்மொழி, பொது மொழி என மூன்று வகைப்படும்.
   - தனி மொழி- ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது. (எ.கா.) நில், வா, செல், படித்தான்.
   - தொடர்மொழி - ஒன்றுக்கும் மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து வந்து பொருள் தருவது. (எ.கா.) வேலன் படித்தான், அவன் வீட்டிற்கு நாளை செல்வேன்.
   - பொதுமொழி- ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும், அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்து, தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது பொதுமொழியாகும்.
   - எ.கா. எட்டு -'8' என்னும் எண்ணைக் குறிக்கும் பொழுது தனிமொழி. (தனிமொழி)
   - எட்டு - எள் + து -'எள்ளை உண்' என்னும் பொருளில் வரும் பொழுது பொதுமொழி. (பொது மொழி)

## கற்பவை கற்றபின்(பக்கம்.14)

1. **தேன், நூல், பை, மலர், வா - இத் தனிமொழிகளுடன் சொற்களைச் சேர்த்துத் தொடர்மொழிகளாக்குக.**

   தேன் சுவையானது, நூல் பல கல், பை கொண்டுவா, மலர் மலர்ந்தது, அருகில் வா.

---

2. **வினையடியை விகுதிகளுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக.**

   காண் - காணுதல், காண்டல், காணல், காணாமை

   சிரி - சிரித்தல், சிரியாமை

   படி - படித்தல், படியாமை

   தடு - தடுத்தல், தடுக்காமை

---

3. **தனிமொழி, தொடர்மொழி ஆகியவற்றைக் கொண்டு உரையாடலைத் தொடர்க.**

   **அண்ணண்** : எங்கே செல்கிறாய்? (தொடர்மொழி)

   **தம்பி** : **கடைக்கு** (தனிமொழி)

   **அண்ணன்** : **கடைக்குச் சென்று என்ன வாங்குவாய்?** (தொடர்மொழி)

   **தம்பி** : **எழுதும் தாள், எழுதுகோல்** (தொடர்மொழி)

   **அண்ணன்** : **ஏன்?** (தனிமொழி)

   **தம்பி** : **எழுதுவதற்குத் தாளும், ஏடும், எழுதுகோலும் தீர்ந்துவிட்டன.**

---

4. **மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலைமீது ஏறுவேன்; ஓரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன்; சுற்றுமுற்றும் பார்ப்பேன். மனம் அமைதி எய்தும்'.**

   இத்தொடர்களில் உள்ள வினைமுற்றுகளைத் தனியே எடுத்தெழுதித் தொழிற்பெயர்களாக மாற்றுக.

   அழைக்கும் - அழைத்தல், அழைப்பு

   ஏறுவேன் - ஏறுதல்

   அமர்வேன் - அமர்தல், அமர்வு

   பார்ப்பேன் - பார்த்தல், பார்வை

   எய்தும் - எய்துதல்

---

5. **கட்டு, சொட்டு, வழிபாடு, கேடு, பாடுதல் - இத்தொழிற்பெயர்களை வகைப்படுத்துக.**

   கட்டு, சொட்டு - முதனிலைத் தொழிற்பெயர்

   கேடு - முதனிலை திரிந்த தொழிற்பெயர்

   வழிபாடு, பாடுதல் - விகுதிபெற்ற தொழிற்பெயர்

---

விழித்துக் கொண்டிருக்கும் நேரமெல்லாம்
படித்துக் கொண்டிருப்போம்

## எமது வெளியீடுகள் (STATE BOARD)

6th to 12th Std - **STEP TO SUCCESS ENGLISH**

10th to 12th Std - **ELITE ENGLISH**

6th to 12th Std - **உன்னால் முடியும் தமிழ்**

10th to 12th Std - **அமுத சுரபி தமிழ்**

6th to 10th Std - **சமூகஅறிவியல்**
(Tamil & English Medium)

8th to 10th Std - **அறிவியல்**
(Tamil & English Medium)


**டால்பின் பப்ளிகேசன்ஸ்®**

239, கீழப்பட்டித்தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம். த.நா.

**Cell : 98653 06197 / 89256 77710 / 99435 67646**
**93453 14146 / 93453 30937**

Mail us : dolphin.pub2005@gmail.com  Visit us : www.kalvidolphin.com


ICICI Bank iMobile  BHIM  pockets

Merchant Name : DOLPHIN PUBLICATIONS
Mobile Number : 8668163362

Steps to Pay UPI QR Code
Open UPI app > Select 'Tap to Pay' > Scan QR Code > Enter Amount

G Pay **94427 17794**
**63743 17883**